பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க ...ரதி விலை அணு ஒன்று

[வாரப்பதிப்பு]

வருட சந்தா முன் பணம்	...	ரூ. 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ. 1—12
வெளி நாட்டிற்கு ,,	...	ரூ. 4—0

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷ ஐப்பசி-மீ 1-உ (17—10—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 25.

உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், பத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள். பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும், வேறு பல ரிப்பேர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

C. N. முருகைய பண்டிதர் மருந்துகள்.

(36-வருஷத்திய அனுபவம்)

திருவள்ளுவர் ஞானவெட்டிப் பிரகாரம் குருமுப்பூவினால் முடிந்தவைகளும் 6 தலைமுறையாய் நாங்கள் கையாண்டு வருகிற சண்ட மாருதக் குளம்பு தாளக பஸ்பம் சொர்ணரத்னாதி அயக்காந்த சத்துச் செந்தூரம் நாகபஸ்பம் முதலிய சிறந்த அவுஷதங்கள். ஆங்கில டாக்டர்கள் பலர் ஆப்ரேஷன் இல்லாது தீராது என்று கைவிட்ட வியாதியஸ்தர் பலரை 3 வேளை மருந்தினால் குணப்படுத்தி கவுரவ சர்ட்டிபிகேட்டுகளும் சங்கிலி மேடல் முதலானவை பெற்றிருக்கிறோம்.

க்ஷயத்திற்கு

(1) தாளக பஸ்பம் (2) கபகஸ்தூரி எண்ணெ (3) சொர்ணரத்னாதி அயக்காந்த சத்துச் செந்தூரம் (4) சிவப்பிரகாச லேகியம். நெடுங்காலமாய் அவஸ்தைப்படும் க்ஷயம் என்னும் கொள்ளை நோயையும் ஆயுளுள்ளளவும் இம்சிக்கும் (Ashthma) என்னும் சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், சகிக்க முடியாத இளைப்பு இதுகளை எமது தாளக பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணெயையும் சேர்த்து அமாவாசை பிரதமையன்று உபயோகித்து அதன்பின் 12-நாள் சொர்ண ரத்னாதி அயக்காந்த சத்து செந்தூரமும் சிவப்பிரகாச லேகியத்தையும் உபயோகிக்கவும். பின் பௌர்ணமி பிரதமையன்று மேற்படி பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணெயும் சாப்பிட்டு அதன்பின் 12-நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு மறு அமாவாசை பிரதமையில் பஸ்பமும் கஸ்தூரி எண்ணெயும் சாப்பிட்டு பின் 12 நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு விட்டால் பூர்ண சுகமாய் விடும். என் அனுபவத்தில் 1000 கணக்கான வியாதிகளை த்தீர்த்து இருக்கிறேன். குணமாகாவிடில் பணம் வாபீஸ் செய்கிறோம்.

மூன்று வேளையில் சகிக்கமுடியாத இளைப்பு இருமல் இதுகளை மட்டும் சாந்தி செய்யக்கூடிய மருந்து விலை ரூ. 6.

36-நாள் பூர்ண குணமுண்டாக்க ரூபா 75—0—0 (12-நாள் மருந்து தடவை 1-க்கு அனுப்பப்படும்) 12-நாள் மருந்து ரூ. 25—0—0 மூன்று முறைக்கு 36 நாளுக்கு ரூபாய் 75—0—0

மேகசூலைக்கும், மூலத்திற்கும்.

குருமுப்புவினால் முடிந்தது மேகாஹாதி வடகம். அசனவில்வாதி தைலம்.

மேகசூலை, ஜுரசூலை, பக்கசூலை, கால்கை மூளிகளில் வீக்கம், கைகால் முடக்கு, கைகால்களில் மோதுகட்டி 10. 15வருஷ நடக்க முடியாமலிருக்கும் சூலைக்கு 15-வேளை மருந்தில் சுகமுண்டாகி நன்றாய் நடக்கலாம். இதல்லாமல் ரத்தமூலம், குத்தல், உள்மூலம், அபானத்தில் முளை போலிருக்கும் புறமூலம், மலத்திற்கு முன் பின் ரத்தம்வரும் சீழ்மூலம் முதலிய நவமூலங்களைக் கண்டிக்கும். ஆப்ரேஷன் தேவையில்லை.

15-வேளை மருந்திற்குப் ஒன்றுவிட்டொரு நாள் ஸ்நான தைலத்திற்கு ரூபாய் 15—0—0

ஸ்ரீ நமசிவாயகுரு சந்தானகரணி எண்ணெ. (1)

பெரிய எண்ணெ. (2)

ஸ்திரீகளுக்கு:— பலவகை வெள்ளை ரோகங்கள், மலட்டு ரோகம் மாதவிடாய் காலத்தில் பொறுக்க முடியாத வயிற்றுவலி, மாதவிடாய் அளவுக்கு குறைந்தும் அல்லது அதிகப்பட்டும் போதல் வயற்றில் கட்டி மாதம் பலமுறை மாதவிடாய் காணுதல் அல்லது பல மாதங்கள் ஆகாதிருத்தல் சிறுமிகள் பருவமாகாது பல ஆண்டுகள் வரை நின்றுவிடல் இவைகளும் கர்ப்பப்பையின் அறுவகை ரோகங்களும் 3-நாள் மருந்தில் நீங்கி மூன்று மாதத்தில் கர்ப்பம் உண்டாகும்.

(2) ஆண்களுக்கு:— அதிக போகத்தினால் உண்டாகும் நீர் கடுப்பு வெள்ளை, மஞ்சள் வெள்ளை, ரணம், கிரந்தி, சரீராதியந்தம் குத்தல் வலி, இன்னும் ரோகஸ்திரீகளினாலுண்டாகும் பல வியாதிகளும் மூன்று நாள் மருந்தில் பூர்ண சுகமுண்டாகும்.

3 அவுன்ஸ் எண்ணெ ரூ. 7. 1 சேர் அமிர்த சஞ்சீவி லேகியம் ரூ 15.

மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

இது 20 வகை மேகத்தையும், 8 வகை குன்மம், 21 வகை வாய்வு 40 வகை பித்தம், ஸ்திரீகளுக்குள்ள ஆறுவகை கர்ப்பநோய்களை தீர்த்து நல்ல பசி தீபனத்தைக்கொடுத்து ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி, தாது விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும்.

48 நாள் லேகியம் 1 சேர் ரூ 5. 24 நாள் லேகியம் ரூ. 2—8, 12 நாள் லேகியம் ரூ. 1—4.

நீரழிவுக்கும், தாது புஷ்டிக்கும் அமிர்த சஞ்சீவி லேகியம்.

வங்கபஸ்பம். தங்கபஸ்பம் 108புடமான அப்ரேக செந்தூரம். பவளபஸ்பம். நீரழிவு, அந்தரதாகம், மலசிக்கல். அல்லை, நீர்ப்பாண்டு சரீரத்தை வரட்சியாக்கக் கூடிய அஸ்திமேகம், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து தேக செளுப்பை மாற்றும் நாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. பால்ய பருவமடைய விரும்பும் விருத்தர்களுக்கு அருமையான மருந்து. கிழத்தனத்தை நீக்கி வல்லமை யடையச்செய்வதில் இதற்கு நிகரானது உலகில் கிடையாது. உலக சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கலாம். மருந்தின் பெயரைப் பாருங்கள். சாஸ்திர ரீதியாய் முறை தவறாமல்செய்தது. புருஷர், பெண்கள் யாவரும் சாப்பிடலாம்.

48 நாள் சாப்பிடகூடிய லேகியம் ரூ. 15—0—0

12 நாள் அப்ரேக் செந்தூரம்	ரூ.	6	4	4
12 நாள் வங்கபஸ்பம்	ரூ.	8	0	0
தங்க பஸ்பம் 12 நாள்	ரூ.	6	4	0
பவள பஸ்பம் 12 நாள்	ரூ.	1	8	0

ஆக மொத்தம் ரூபாய் 17—0—0

சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

ஆண், பெண் குழந்தைகள் வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர 20 வகை மேகத்தையும், நீரழிவு, நீர் எரிச்சல், கண் எரிச்சல், கண் புகைச்சல், கைகால் எரிவு, கிரந்தி, கத்தாழைநாற்றம், அஸ்திஜுரம், வெட்டை, மயக்கம், தலை பொடுகினால் மயிர் உதிர்தல் இதுகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 5—0—0, 12 அவுன்சு ரூ. 2—8—0, 6 அவுன்சு 1—4—0

ராமபாணக் குளிகை.

ஆண்களுக்கு:—நீரடைப்பு கல்லடைப்பு, மலஜலக்கட்டினால் பிராணாவஸ்தைப்படும் சமயமும் வயற்றில் நரம்பு பிடித்து நிமிரமுடியாதிருத்தல், அண்டவாயு விரை வீக்கம் விரைகுத்தல் வலி இவைகளின் வாதையால் தற்கொலை செய்யத் துணியும் வியாதியஸ்தருக்கு ஓர் குளிகை சுகப்படுத்தும்.

பெண்களுக்கு:—கர்ப காலத்தில் மலஜல மிறங்காது துன்பம் இடுப்புவலி கணுக்களில் வலி, 5, 7, 9வது மாதங்களில் அனுபானப்படி ஒரு குளிகை சாப்பிட்டுவர கர்ப்பப்பை ரோகங்களை நீக்கி சிசுவுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து சுகப் பிரசவம் ஆகும். 5 குளிகை ரூ 2—8—0

குரு ஜுரஹரி மாத்திரை.

மலேரியா என்னும் குளிர் ஜுரத்தை ஆயுள் பூராவும் வராமல் தீர்க்கும் மூன்றும் முறை ஜுரம், நாலா முறை ஜுரம் இதுகளை வேருடன் நீக்கும். குணமாகாதவரை பணம் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

6 வேளை மாத்திரையும் 9 வேளை கஷாய மருந்தும் சேர்ந்து ரூ. 5—0—0

(Dentone) டென்ட்டோன் என்னும் பல்பொடி.

சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்டது. பற்களில் உண்டாகும் விஷ நீர், இரத்தம் விழுதல் சீழ் வடிதல், சொத்தை வலி, ஈர்களில் ஏற்படும் புண் இவைகளை உடனே சுகப்படுத்தும். டப்பி 1க்கு 0—2—6, டஜன் 1 க்கு ரூ 1—8—0. குரோஸ் 1 க்கு ரூ. 18—0—0.

மேல் கண்ட அவுஷதங்கள் ஆறு தலைமுறையாயும் என் 36 வருஷ அனுபவத்தில் நடந்தேறி வருகிறது ஆகையால் இதைப்பற்றி அதிகம் விமர்சையாய் கூறவில்லை. இந்த அவுஷதங்களால் குணமில்லை யென்று நிரூபிக்கிறவர்களுக்கு பணம் வாபீசு செய்கிறோம். உபயோகிக்கும் முறையும் அனுபானமும் மருந்துடன் வரும் இன்னும் விபரங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் 1 அணா தபால் அனுப்பவும், வியாதியஸ்தரிடமிருந்துவரும் கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும்.

நற்சாக்ஷியைக் கவனியுங்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் ஸி. எஸ் ரத்னசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்டு போர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர்.

" ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். வக்கீல் எம். எல். ஏ. கோயமுத்தூர்.

ஸ்ரீ நமச்சிவாயகுரு தமிழ்சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, 14-106 பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

டாக்டர் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு

ஒரு பஹிரங்க கடிதம்.

—o—

சமீப தருணத்தில் தங்களின் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீ வில்லிப் புத்தூர் மகாநாட்டில் தாங்கள் பேசியதைத் தமிழ் நாடு பத்திரிகை முதலிய பல பத்திரிகைகளிலும் கவனித்தோம். அந்த அக்கிராசனப் பிரசங்கத்தில் வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் எந்த கட்சி அபேக்ஷகர்களுக்கு ஓட்டு கொடுப்பதென்னும் வினாவையெழுப்பி, சுயராஜ்யக் கட்சி அபேக்ஷகர்களுக்கு ஓட்டுக் கொடுப்பது தகாதென்றும், சுயராஜ்யக் கட்சி தற்காலம் பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு அபாயத்தைத் தரத்தக்கதென்றும், சர்வ சாதாரணமாய் சகலருக்கும் தெரிந்துள்ள சிலபல உதாரணங்களுடன் விளக்கிப் பேசியிருப்பது உச்சிமேற்கொள்ளத் தக்கதுதான்.

அதற்குப் பின் ஜஸ்டிஸ் கட்சியோ பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலம் 'செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்சியென்றும், அவ்வாறே அக்கட்சி பார்ப்பனரல்லாதார்க்கு அனுகூலஞ் செய்து வருகிறதென்றும், ஆயினும் அக்கட்சி பார்ப்பனரல்லாதாருடன் போட்டிபோட சர்க்காரை ஆதரிக்கக் கூடியதாய் இருக்கிறதென்றும், ஆதலால் அதைத் தமக்கு ஆதரிக்க இஷ்டமில்லையென்றும், தற்கால ஜஸ்டிஸ் கட்சி தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் பேசியிருக்கிறீர்கள்.

சுயராஜ்யக் கட்சி தற்காலம் ஆதரிக்கத் தக்கதல்லவென்பதற்கு பல காரணங்களும் உதாரணங்களும் காட்டியிருப்பது போல் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கக் கூடாதென்பதற்கு எவ்வித காரணமும் உதாரணங்களும் சொல்லப்படவில்லை. ஆயினும் பார்ப்பனரை உத்தேசித்து ஜஸ்டிஸ் கட்சி சர்க்காரை ஆதரிக்கிறது என்று மாத்திரம் தமிழ்நாடு பத்திரிகையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் சட்டசபையிலுள்ள ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்கள் பெரிய பெரிய விஷயங்களிலெல்லாம் சர்க்காரை எதிர்த்து வரவில்லையா? அதனால் பொது ஜனங்களுக்கு அனுகூல மேற்படவில்லையா? அரசியலில் எல்லா விஷயங்களிலுமே எதிர்ப்பது சாத்தியமா? அப்படி எல்லா விஷயங்களிலுமே சுயராஜ்ஜியக் கட்சியினரால் சர்க்காரை எதிர்க்கப்பட்ட வங்காளமும் மத்திய மாகாணமும் அடைந்த கதியைத் தாங்கள் உணர்ந்திருக்கவில்லையா? பரித்பூர் மகா நாட்டில் ஸி. ஆர். தாஸ் அவர்கள் சர்க்காருடன் ஓரளவு ஒத்துப்போக வேண்டுமென்னும் பொருள்படப் பேசியிருக்கவில்லையா? பொது நலமின்றி தாம் மட்டும் நலமடையும் பொருட்டானால் ஒரு மெம்பர் அவர் தம் சகாக்கள் சிலருடன் எப்போதும் எல்லா விஷயங்களிலும் சர்க்காரை எதிர்த்து வரலாம். அப்படி எதிர்த்து சுயநல மடைந்தவர்கள் அநேகருண்டு. அதுவும் தாங்கள் அறியாததல்லவன்றோ? தேசம் தற்காலம் இருந்துவரும் நிலைமைக்கேற்பவும் அதனிலும் சென்னை மாகாணத்தில் எல்லாத் துறைகளிலும் பார்ப்பனராதிக்கம் உன்னத மடைந்திருக்கும் நிலைமைக்கேற்பவும், பார்ப்பனரான அதிகார வர்க்கத்தின் கீழ்ப் பார்ப்பனரல்லாதார் நசுக்கப்பட்டுவரும் நிலைமைக்கேற்பவும், சில விஷயங்களில் ஜஸ்டிஸ் கட்சியார் சர்க்காருடன் ஒத்துப் போனால் என்ன முழுகிப் போயிற்று. நெருப்பென்று சொன்ன மாத்திரத்தில் வாய் வெந்துவிடுமா? அப்படி ஒத்துப் போகாவிட்டால் சமீபத் தருணத்தில் நிறைவேற்றப்பட்ட இந்து மத தரும பரிபாலன சட்டத்தின் விஷயமாயும் மலையாளக்குடிவாரமசோதா விஷயமாயும் சர்க்கார் ஒத்து வந்திருக்குமா? இப்பார்ப்பனர்கள் சர்க்காருடன் சேர்ந்து இதுகளைக் கெடுத்திருக்க மாட்டார்களா? இன்னமும் சில பார்ப்பனர்கள் சர்க்காரை ஆதரித்துக் கொண்டும் ஆதரிப்பதாய் வாக்குக் கொடுத்தும் மேல்படி மசோதாக்களை ஒழிக்கப் பார்ப்பது தங்களுக்குத் தெரியாதா? ஒரு குறிப்பிட்ட கொள்கைகளை நமது முன்னேற்றத்திற்கு நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு ஒரு சமூகத்தார் இடையூறு செய்வதற்கு சர்க்கார் தயவைத் தேடினால் நமக்கு அக்கொள்கை பிரதானமென்று நாம் கருதினால் நாமும் கொஞ்சமாவது சர்க்கார் தயவைத் தேடித்தான் ஆக வேண்டும்; இதைத்தாங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். சுயராஜ்யக் கட்சியின் நடைமுறைகள் பிடித்தமில்லாமையால் அதை விட்டு விலகின ஜெயகர், கேல்கார், மூஞ்ஜெ ஆனே முதலிய மற்றுமுள்ளத் தேசத் தலைவர்களெல்லோரும் சர்க்காருடன் பரஸ்பர ஒத்துழைப்பு என்னும் கட்சியை ஸ்தாபித்துக்கொள்ளவில்லையா? அக்கொள்கையின்படி நமது முன்னேற்றத்திற்கு எந்த மட்டில் சர்க்கார் நம்முடன் ஒத்துழைக்கின்றதோ அந்தமட்டில் நாமும் விட்டுக்கொடுக்க வேண்டாமா? எல்லா அரசியல் விஷயங்களிலும் சர்க்காரை நிராகரிப்பதா இப்போதைய தேசியத்திட்டம் இதுசமயம் அப்படிச்செய்வதால் நாட்டிற்கு நற்பயன் அளிக்குமா? அப்படியானால் சர்க்காரோடு ஒத்துழையாமை என்றுதானே சொல்ல வேண்டும். அதற்கு தேசம் தயாராயில்லை என்றுதானே மகாத்மா ஒத்துழையாமையை காங்கிரசிலிருந்தே எடுத்து விட்டார். அப்படியிருக்க மறுபடியும் அதைப்பற்றி பேசுவதில் பயனென்ன?

சுயராஜ்ஜியக் கட்சிக்கும் ஓட்டுக் கொடுக்கக் கூடாது ஜஸ்டிஸ் கட்சிக்கும் ஓட்டுக் கொடுக்கக் கூடாதென்றால் இம்மாகாணத்தில் வேறொரு மூன்றாவது கட்சி இருக்கிறதா? அல்லது இப்பொழுது இருந்து வருவதும், அர்த்தமில்லாததும் கொள்கை இல்லாததும் சமயத்துக்குத் தக்க உருவெடுப்பதும் ஆகிய சுயேச்சைக்காரருக்கா ஓட்டுக் கொடுப்பது அப்படிக்காவது சுயேச்சைக் கட்சி என்று ஒரு கட்சியாவது இருக்கிறதா?

உலகத்தில் பொது ஜனங்களை ஏமாற்ற நினைத்து சர்க்காரை எதிர்ப்பதென்பது சில மனிதர்களுடையவும், சில பத்திரிகைகளுடையவும் தொழிலாய் இருக்கலாம். அதனால் சற்று சுயநலப் பயனும் அடையலாம். இம்மாதிரி சில மனிதர்களுடையவும் பத்திரிகைகளுடையவும் மோச நடவடிக்கைகளாலும், பிதற்றப் பேச்சுகளாலும் சில தேசங்கள் பாழாய்ப் போய்விட்டன என்பது நிதரிசனமல்லவா? பொதுஜன நன்மையை நாடும் உத்தம தேசாபிமானிகள் தீவிர ஆராய்ச்சியுடனும், நிதானத்துடனும் எழுதியும் பேசியும் வருவார்களன்றோ? தேசாபிமானமும் தற்காலத்து அரசியல் நிலைமையும், அதனினும் சென்னை மாகாண பார்ப்பனரல்லாத சமூகம் ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் நிலைமையும், அதைக் கைதூக்கிவிட எந்தெந்த வகையில் முயற்சித்தல் வேண்டுமோ. அவ்வவ்வகையில் முயற்சிக்க வேண்டுமென்னும் நல்லுணர்ச்சி பொருந்தியுள்ள தாங்கள் பார்ப்பனரல்லாதாருக்குத் தலைவராய் விளங்கிவரும் தாங்கள்—ஸ்ரீவில்லிப்புத்தூர் மகாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி தோஷங் காட்டிப் பேசியிருப்பது ஞாயமற்றதாய் இருக்கிறது என்பதை இது சமயம் பொது நன்மையை உத்தேசித்து வெளிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம். ஆதலால் தயவு செய்து தாங்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாதவரை தக்க சமாதானம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

கும்பகோண வாசி.

தூத்துக்குடி.

மா.வே. ஷண்முகவேல் நாடார் ஞாபகார்த்த வாசகசாலையில் 'சுதேசமித்திரன்,' 'திராவிடன்,' 'தமிழ்நாடு,' 'நவசக்தி,' 'குடி அரசு,' 'தேச பந்து,' 'நாடார்குல மித்திரன்,' 'ஆனந்த போதினி,' 'நாடார் நண்பன்,' 'ஆனந்த குண போதினி,' 'திருக்குறட் குமரேச வெண்பா' ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளும், 'ஹிந்து,' 'பாஜி அக்பர்,' 'மார்டன் ரிவியூ,' 'டுடுல்,' 'லிபரேட்டர்,' 'எங்இந்தியா' 'ஸ்ரீதர்மா,' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளும் வரவழைக்கப் படுகின்றன. அன்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள தேசீய ராஜீய நூல்களும் பரமஹம்சர், விவேகானந்தர், மஹாத்மா காந்தி முதலிய பெரியோர்களின் உபதேச மொழிகளும், உலக சிரேஷ்டர்களின் சரித்திர நூல்களும் இலக்கண இலக்கிய நூல்களும், வேதாந்த சித்தாந்த நூல்களும், புராணேதிகாச காவியங்களும், சோதிட வைத்திய சாஸ்திரங்களும், இங்கிலீஷ், தமிழ் நாவல்களும், ஆங்கில ஹிந்தி தமிழ் அகராதிகளும் இங்கு உள்ளன. மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் சந்தா மாதம் 1-க்கு அணா 4. ஏனையோருக்கு சந்தா அணா 8.

இதுவரை இங்கு விஜயம் செய்து பத்திரிகை வாசித்தவர்களின் தொகை 3762 புத்தகங்களை வாசிக்க வெளியில் எடுத்துச்சென்ற அங்கத்தினரின் தொகை 784. ஆதலால் எல்லாரும் இவ்வாசகசாலையில் அங்கத்தினராய்ச் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளுகிறோமென காரியதரிசிகள் அ. து. கலியாண சுந்தரம், ச. விவேகானந்த நாடார் அறிவிக்கிறார்கள்.

பார்ப்பனர் பாதம் வருடும் பார்ப்பனரல்லாதார்க்கோர் வேண்டுகோள்.

பார்ப்பனச்சொக்குப்பொடியில்சொக்குண்டுழலும் சுயநல மூர்த்திகளே! சோதரர்களே!

இவ்வுலகெட்டிசையும் எற்றிப் போற்றிடும் தமிழன்னையின் தவத்தாலவதரித்துச் செயற்கை தோஷத்தா லியற்கை விரங்குன்றி சுயமதிப்பிழந்து கேவலம் ஜாண் வயிறு பெரிதெனக் கொண்டு நந் தாய்த் திருநாட்டை அன்றுமின்றுமென்றும் அன்னியர்க் கடிமைப் படுத்தியோரும், படுத்துபவர்களும், படுத்தப்போவோர்களுமாகிய பார்ப்பனர்களின் பாதம் வருடி அப்பாதகக் கூட்டத்தாரின் காதகச் செய்கைக்கு துணைபோகும் நுங்களின் சிறுமதியைச் சிந்தித்துருக ஒருளம் போதுமோ? கண்ணீர் வடிக்க இரு கண்ணலாகுமோ? அந்தோ நுங்களின் இயற்கை விரம் செயற்கை தோஷத்திற் கடிமைப் பட்டவாறென்னே! சோதரர்களே! நீங்கள் எத்தால் பார்ப்பனப் பல்லக்குச் தக்காப்போல் அனுபல்லவி கூட்டி ஆட்டம் போடுகிறீர்கள். பலவிதத்திலும் மேம்பாடுற்றிலங்கிய நம் பழம்பெரு பாரதத் திருநாட்டை அயலார்க் கடிமைப் படுத்த அன்றாளுயிலங்கிய அய்யர் குழாங்களின் ஆண்டகையைக் கண்டோ, பகவானல் படைப்பிக்கப்பெற்ற நம்போன்ற மக்களில் ஒரு சாரரைப் பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டெனக் செப்பித் திரியும் அய்யங்கார்களின் ஆற்றலை யுன்னியோ, பார்ப்பனச் சிறுவருண்பதைப் பார்ப்பனரல்லாச் சிறுவர் பார்ப்பின் ஓர் திங்கள் பட்டினி கிடப்பேன் எனக் கத்திய ஆச்சாரியாரின் அதி விசித்திர அறிவை நோக்கியோ, கேரளத்திலே நம் பார்ப்பனரல்லாப் பதிவிரதா ரத்தினங்களை வழக்கமெனும் அரக்காட்சி கொண்டு நாடோறுங் கற்பழித்து நடுத்தெருவி லோட்டும் நம்பூதிரிப்பார்ப்பனப் பசாசினங்களின் ஏகபத்தினி விரதத்தை வியந்தோ, விலங்கினங்களிலும் கடையாம் பன்றியும் நடந்தோடித் திரியும் தெருக்களிலே எம்போன்ற மக்கள் போக்குவரத்திற்கு பந்தம் இட்டுஅல்லல் விளைவிக்கும்,அந்தணர் (பெயரளவில்)களின் ஆணவத்தை ஆலோசித்தோ, விளம்புவீர்! விளம்புவீர்!!

பார்ப்பனக்கொட்டுக்கு ஒக்க ஆட்டமிடும் அன்பர்களே! சற்றுா அமர ஆலோசியுங்கள். பார்ப்பனப்படு கொடுமையைச் சிந்தியுங்கள். எதேச்சாதிகாரப்பழிகாரப்பாவியாரே,சமத்வமே உருவெடுத்த மக்களின்மத்தியில் உயர்வு தாழ்வெனும் பார்ப்பனீயப் படுபிணி புகுத்தி மக்களை அல்லோல கல்லோலப் படுத்தினர். அப் பார்ப்பனப் பிணியை நம் நாட்டைவிட்டுத் துரத்தி மக்களனைவரும் சமமே என்ற சீரிய கொள்கையை ஸ்தாபித்து, சுயராஜ்யமெனும் சாம்ராஜ்யத்தைப் பெற உலகப் பெரியார் சமத்துவ ஞானி, சாந்த வடிவு, சபர்மதிச் சாது காந்தியடிகளால் ஓதப்பெற்ற "ஒத்துழையாமை" எனும் காந்தீயத்தைக் கல்லியவர் பார்ப்பனரன்றோ! நம் வாக்குரிமைகளைக் கொள்ளை கொண்டு சட்ட சபை புகும் வரையும் இல்லாத பொல்லாது வாக்குறுதிகளையும் இன்சொற்களையும் நம் மத்தியில் இயம்பி,சட்ட சபை சென்றதும் வாக்குறுதிகளை வனவாச மோட்டியும், இன்சொல்களை எமனூரோட்டியும் விட்டுவிட்டதின்றி நாட்டின் நலங்கோரி நம் மாபெருந் தலைவர்களால் சுயமதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு கொண்டுவரப்பட்ட மலையாள குடிவார மசோதா, தேவஸ்தான சீர்திருத்தச்சட்டம்,பம்பாய் புரோகிதர் மசோதாபோன்ற சீரிய சட்டங்களை தம்மினத்தார் இந்திரபோக மனுபவிக்கும் குறிபொன்று கொண்டு கட்டுப்பாடாய் எதிர்த்துத் தோற்கடிக்க கங்கணங் கட்டித் திரிந்தவர் பார்ப்பனரன்றோ? போதாக்குறைக்கு, மக்களைப் பாழ்ப்படுத்த வல்லதாகிய பார்ப்பனீயத்தை அடியுடன் வீழ்த்தி மக்களின் சுயமதிப்பைக் காப்பாற்ற அல்லும் பகலும் முழைப்பவர்களும் நாட்டின் நலங்கோரி சொல்லொணு தியாகங்கள் புரிந்த தியாக மூர்த்திகளாம் வைக்கம் வீரரையும், வீரர் ஆரியா போன்ற பெரியார்களையும் சிறையிலிட அன்னிய அரசாங்கத்தை யாசித்து நிற்போரும் அய்யங்கார் பார்ப்பனரன்றோ? கருங்கக் கூறின் அன்றுதொட் டின்றுவரை பார்ப்பனரால் நம் நாட்டிற்கேற்பட்ட இன்னல்களையும் குறிப்பாய் நம் பார்ப்பனரல்லாதார்க் கிழைத்த மாபெருமதீதிகளையும் எடுத்தோதுவதெனின் ஓராண்டியலா! ஈராண்டியலா!! என்றுமே இயலா!!! ஆதலாலெஞ்சோதரர்களே! கேவலம் சாண் தொந்தியை பெரிதெனக் கொள்ளாது (மானமழிந்தபின் வாழாமை மேலினிதே) என்ற பெரியாரின் தெள்ளுரை செவிமடுத்து, பார்ப்பனீயத்தால் நம் நாடுற்ற கேவலத்தையும் பொதுவாய் நந் தமிழர்க்கேற்பட்ட இழிதகமையையும் நீக்கி சுயமதிப்பெனும் சாம்ராஜ்யம் மக்களெவருள்ளத்தும் பொங்கித் ததும்பப்பாடு படும் நம் பெரியார்களுக்கு தம் தம் சக்திக்கேற்றப்போல் துணை புரியும்படி வினயத்துடன் விண்ணப்பித்துக் கொள்கின்றேன். இவ்வாறின்றி பழய பார்ப்பனப் பாதம் வருடும் கருப்பன் கருப்பனே எனத் திரிவீர்களாகில் ஆப்பதனை அசைத்தெடுத்த அங்கதனுறவினரைப்போல் அவதியுற நேரிடுமென்பதையும் எச்சரிக்கின்றேன். எல்லாம் வல்ல லோக நாயகி கிருபை பாலிப்பாளாக.

பெருமாள், தூத்துக்குடி.

ராமநாதபுரம் தாலூகா மகாநாடுகள்

ராமநாதபுரம் தாலூகா இளைஞர், முஸ்லீம்கள், ஸ்திரீகள் மஹாநாடு அழகன்குளம் என்னும் கிராமத்தில் நாளிது அக்டோபர் மாதம் 16, 17-உகளில் நடைபெறும். இளைஞர் மகாநாட்டுக்கு தமிழ் "ஸ்வராஜ்யா" துணை ஆசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமை வகிப்பார். ஸ்திரீகள் மஹாநாட்டுக்கு சென்னை "தமிழ் மகன்" ஆசிரியை. மா. மங்களாம்பாள் தலைமை வகிப்பார். முஸ்லீம்கள் மஹாநாட்டுக்கு மதுரை ஜனுப் ஹாஜி முகம்மது மௌலாறு சாகிப் அவர்கள் தலைமை வகிப்பார் என மஹாநாடுகளின் காரியதரிசி அறிவிக்கிறார்.

ஓர் அறிக்கை.

வடஆற்காடு ஜில்லா மகமதியர் அல்லாதார் தொகுதியில் மூன்றனுள் ஒருஸ்தானத்திற்கு சென்னை சட்ட சபை அபேட்சகராக நிற்கும் ஸ்ரீமான் எம். வி. பீமராஜ முதலியார் சில காலம் குடியாத்தம் முனிசிபல் அங்கத்தினராகவும், தற்போது முனிசிபல் தலைவராகவும் இருந்து அரிய ஊழியம் செய்து வந்திருக்கிறார். இவர் நகர சபைத் தலைவரானவுடன், வரிகள் உயர்த்தவேண்டிய நிலைமையில் பணமுட்டு இருந்ததை நியாயமான சிக்கன மூலம் கவுன்சில் கடன் சுமார் ரூ. 10,000-க்கு, மேலாகவே கொடுத்து, வருஷாந்திர மிச்சமும் காட்டியிருக்கிறார். தெரு விளக்குகளை அநேக ஆண்டுகளாக கண்ட்ராக்டுக்கு விட்ட வகையில் ஆயிரம் ரூபாய் அதிகச் செலவானதை முனிசிபல் சிப்பந்திகளைக் கொண்டே அக்காரியத்தை நிறைவேற்றி ஆண்டுதோறும் 800 ரூ. மிச்சப்படுத்தியும், அதிக விளக்குகள் போடுவித்தும், முனிசிபல் ஆரம்பக் கல்விச்சாலைகளில் ஒரே பாட புத்தகமாக ஏற்படுத்தியும், சில பள்ளிகளில் ஆங்கிலங் கற்பிக்க ஏற்பாடு செய்தும், சூப்ரவைசரை நேமித்தும், ஆரம்பக்கல்வியில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார். பழைய வரிகளை அங்கீகரித்தும் ஏழைகளுக்கு வரியில்லாமலும் செய்திருக்கிறார். ஹைஸ்கூலில் மாணவர்கள் அதிகரித்து வருவதுடன் ஓர் அரிய பெரிய கட்டடம் கட்டவும் ஏற்பாடு செய்து வருகிறார். முனிசிபல் நிர்வாகத்தின் கீழ்இஜ்ஜில்லாவில் படித்த மாணவர்கள் போதனுமுறைப் பயிற்சி பெற செக்கண்டரி லோயர் கிரேட் ட்ரெயினிங் வகுப்புகள் இங்கேயே வைக்க ஏற்பாடு செய்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது சுத்த தண்ணீர் சப்ளை விஷயத்தில் முன்னிருந்த குறைகளை நீக்கி, குழாய்களை அதிகப்படுத்தியும், வகுப்பினருக்குத் தகுந்தபடி அவரவர் விசேஷ காலங்களில் தண்ணீர் சப்ளை குறைவறச் செய்தும் வருகிறது முதலியாரவர்களுடைய பெருந்தன்மைக் குணத்துக்கு அறிகுறியாகும் என்வும்தாலூகா ஜில்லா போர்டுகளிலும் இவ்வாறே அரிய ஊழியம் செய்திருப்பாரென்று நம்புவதாகவும் நீண்ட நாட்களாக பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறார் எனவும், ஆகையால் திருவாளர் எம். வி. பீமராஜ முதலியாரவர்களைச் சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்க வேண்டுமெனவும் அடியிற்காணும் குடியாத்தம் முனிசிபல் அங்கத்தினர் பதினைந்து பேரும் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீமான் மா. ஜா. மகம்மத்கான் சாயபு, வி. அறுமுக முதலியார், மயிலப்ப ஐயாசாமி முதலியார், க. மா. மகமத் இப்ராஹீம் சாயபு மா. ஆ. வேலாயுத முதலியார் ஜி. கே. முனுசாமி நாட்டார், சி. ஏ. அப்துல் ரஹீம், கே. முத்துசாமி முதலியார் ஆ. தா. அப்துல்காதர், எஸ். வீரன், மா. உ. அஜீஸ் கான், வை. பெ. ஜடையப்ப நாட்டார், எம். ஏ. கோவிந்தராஜுலு முதலியார், எஸ். துரைசாமி செட்டியார்.

தமிழரியக்கம்.

தற்கால நிலையும் வாக்காளர் கடமையும்.

என்னில்லாத வகுப்புகள் தமிழரிடம் எப்படி வந்தன? ஐம்பொறி அடக்கல் ஆத்ம நிவேதனம் என்ற கொள்கையையுடைய சித்தர்கள் மலிந்த இந்தத் தமிழ் உலகில் பல நிறப்பட்ட வகுப்புகள் எப்படி நுழைந்தன? பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வருணங்கள் தமிழ் உலகில் இயற்கையில் சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளனவா? அன்றியும், ஷை மொழிகளின் உச்சரிப்பைக் கொண்டே அவைகள் தமிழ் மொழிகள் அல்ல என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆரியர்களால் அம் மொழிகள் தமிழ் மொழியில் கலப்புறச் செய்யப்பட்டன என்பதும் வெள்ளிடைமலை. ஆரியர்கள் இந்நாட்டுக்கு வந்த பிறகே ஷை மொழிகளும் வழங்கப்பட்டன. க்ஷத்திரியர் என்னும் தனி வகுப்பார் தமிழ் உலகத்தில் இல்லாததே, ஷை நான்கு வருணங்களும் இந்நாட்டில் ஏற்பட்டதல்ல என்று சொல்வதற்குப் போதிய சான்று. ஆரியர்கள் தங்கள் சமுதாய வாழ்க்கைக் கட்டுப்பாட்டில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்கள் இத்தேசத்திற்கு வந்த பின், ஷை சமுதாய வாழ்க்கையையும் உயர்வையும் நம்மை ஒப்புக்கொள்ளச் செய்து அதன் பலனைய் அவர்களும் மேன்மையான இடம் அமைத்துக் கொண்டனர். காலஞ் செல்லச் செல்ல அவர்களுக்கு மேன்மேலும் சுயநலம் பலப்பட்டு விட்டது. தங்களது உயர்வும் வாழ்வும் தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் நிரந்தரமாயும் உறுதியாயும் இருக்க வேண்டுமென்றே பலவித சூழ்ச்சிகள் செய்து நம்மையும் வகுப்பு, வகுப்புக்களாக பிரித்து ஒவ்வொரு வகுப்பாரும், தான், தான் மேல் என்றும், மற்றவர்கள் கடவுள் இயற்கையிலேயே தாழ்ந்தவர்கள் என்றும் நினைத்துக்கொள்ளும்படியாகவும், ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) தாங்களேதான் எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவர்களென்று ஒப்புக்கொண்டு வணங்கும்படியாகவும் செய்துகொண்டனர். இதன் பலனாக ஆரியரொழிந்த மற்றவகுப்பாருக்குள் வித்தியாசங்களும் பொறாமைகளும் வளர்ந்து ஒற்றுமைக்குறைவுகள் ஏற்படவும், ஆரியர்கள் ஆதிக்கம் பலப்படவும் ஏற்பட்டுப் போயிற்று. தென்ஆப்பிரிக்காவில் இந்துக்கள் சில வீதிகளில் நடமாடக்கூடாது என்ற நிபந்தனையைக் கண்டிக்கப்புகும், நாம் நம் தேசத்திலேயே, நம்முடனிருந்து, நம்முடன்பழகி, நம்மொழிபேசி, நம்மதத்தை அனுசரிக்கும் ஒரே உரிமையாளரைத் தொடவும் கூடாது, வீதியில் நடக்கவும் கூடாது, என்ற சமுதாய நிலை நம்முன் பரப்பி, அதை நிலை நிறுத்திக் கொண்டிருப்போர் யாவர் என்பதை விசாரிக்காமலே, தன்னுடைய குற்றத்தை மறைத்து, பிறர்மீதுகுற்றம் கூறுபவர்களாக இருக்கின்றோம். மேற்சொல்லிய, சமுதாயவாழ்வின் குற்றமும் உயர்வுதாழ்வும் நமது நாட்டில் எதனால் இன்னும் நிலைத்துக்கொண்டிருக்கிறது என்று ஒருவன் ஆராயப் புகுந்தால் அது ஷை ஆரியர் (பார்ப்பனர்) இவ்விடம் நம்மை ஏமாற்றி மேற்பதவிகளைக் கைக்கொண்டு அதிலிருந்து கொஞ்சமும் கீழ் நழுவ இஷ்டமில்லாமல் குரங்குப் பிடியாயிருக்கும் மனப்போக்கே அல்லாமல் வேறல்ல வென்பது புலப்படும். இவ்வித மனப்போக்கு உள்ளவர்களுக்கு முதன் முதல் நாம் மனமாரவேண்டுமென்றே அடிமையாயிருக்கிறோம்.

அடிமைத் தனத்திலிருந்து விலகுதல் எப்படி?

ஒரு கூட்டத்தார் தங்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் மற்றொரு கூட்டத்தாரிடம் இருந்து விடுதலை பெறவேண்டுமானல் தாங்களே தங்கள் காலில் நிற்கும் படியான சக்தியை ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். தங்களது உயர்வு தாழ்வுக்குத் தாங்களே காரணம் என்று நினைக்க வேண்டும். நமது நன்மை தீமைக்கு மற்றவர்களை எதிர்பார்க்கக்கூடாது, ஆரியர்களுக்குத் (பார்ப்பனர்களுக்கு) செய்வதுதான் நமது கடமை. நமக்கு வேண்டியவற்றை ஆரியர்கள் செய்துவிடுவார்கள் என்ற மூடநம்பிக்கையால் நாம் இதுவரை செய்து வந்த காரியங்கள்தான் நாம் சமுதாய வாழ்க்கையில் தாழ்த்தப்படவும், சூத்திரர்கள் என்று பிறரால் அழைக்கப்படவும் செய்துவிட்டது. காலத்திற்குத் தகுந்தபடி ஒத்துப்போவதில் ஆரியர்கள் சமர்த்தர்களானபடியால் ஆங்கில அரசாங்கம் வந்தவுடன் தங்கள் சமுதாய உயர்வும், பழய பஞ்சாங்கமும் செல்லாதென்றுகண்டு அதைச்செல்லுபடியாக்க அரசாங்கத்திலும் ஆதிக்கம்பெற ஆங்கில பாஷையைக்கற்று, அதன் வழியே மேல்பதவியும் அடைந்தனர். அவ்வாங்கிலத்தையும் பதவியையும் தாங்கள் மாத்திரமே முறையே கற்கவும் அடையவுமான வழிகளையும் தேடிக்கொண்டார்கள். அதுதான் காங்கிரஸென்பது. முன்னளிலிருந்தே வந்த மூளையின் உருப்போடும் சக்தியினுலும், அவர்கள் ஏற்படுத்தி வைத்துக்கொண்ட அமைப்புகளினுலும் அவர்களுக்கு ஆங்கிலப் படிப்பு இலகுவில் வந்துவிட்டிருக்கிறது. இதனுலேயே இப்பொழுது பதவியில் இருப்பவர்களில் முக்காலே மூன்று வீசம் பேர்களும் அவர்களாகவே இருக்க நேர்ந்தது. இப்பதவியின்வேட்கைகையினுலேயேதான் இப்பொழுதுவகுப்புப்போர்நிகழ்ந்துவருகிறதே அல்லாமல் வேறில்லை. இப் பதவியின் வேட்கையும் தொலைந்து சமுதாய வாழ்க்கையிலும் அமைதி வரவேண்டுமென்றால் தமிழர் ஒவ்வொருவரும் தமது கடமை என்ன என்பதை நன்ருய் யோசிக்கவேண்டும். தான் செய்தால் உத்தமம், தம்பி செய்தால் மத்திமம், பிறர் செய்தால் அதமம், என்ற பழமொழிக்கிணங்க ஒவ்வொருவனும் அரசியலில் தனது கடமை என்னவென்று யோசிக்கவும் வேண்டும். பிறர் நமக்காகச் செய்வார்கள் என்று நம்பி இருத்தல் மோசமே. தன் நலம் கருதி தமிழ் மொழியையும்தமிழ் மறைகளையும் அழித்து நம்மையும் தாழ்த்தி நமது சுயமரியாதையும் ஒழித்த ஆரியரிடம் நமது அரசியல் சுதந்திரத்தையும ஆத்மசுதந்திரத்தையும் ஒப்படைத்தது பெரும் ஆபத்து. அதின்மூலம் நாமே நம்மை அடிமைப் படுத்திக்கொள்ளுகின்றோம். அன்னியர் உழைப்பினுல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு சரீரத்தின் பிரயாசை எப்படி தெரியும்? கிராம வாழ்க்கை அறியாதவர்கள் கிராமத்தாருடைய சுக துக்கங்களை எப்படி அறியமுடியும்? சரீரப் பிரயாசை படுவது கேவலமென்று நினைப்பவர்கள் ஏழை மக்களுடைய தொழிலைப்பற்றியும் ரத்தம் சொட்டும் உடல் வருத்தத்தைப்பற்றியும், என்ன அறிவார்கள். தங்களுடைய முன்னேற்றம் நிறம்படுவதற்காக எவ்வழியோ அதை அரசாங்கத்தாருக்குப் போதித்து கோடாரிக் காம்புகளாக நிற்பவர்கள் நமது நாட்டுக்கோ நமக்கோ என்ன செய்யப் போகிறார்கள்? சோர நாயகியின் உள்ளம், தன் புருஷன் வீட்டில் சரியாகக் காரியங்களைப் பார்த்து வந்தாலும், சோரநாயகனிடம் இருப்பதுபோல் தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து, தமிழிலேயே மேம்பாடடைந்து விட்டு, தமிழ்மொழி பேசும் மற்றவர்களைச் சகோதரர்களென்று நினைக்காமலும், அவர்களைச் சூத்திரரென்றும், சமுதாய வாழ்க்கையின் நிலையில் தாழ்ந்தவர்களென்றும் செய்து தங்கள் சமஸ்கிருத பாஷையில் சோரநேசம் வைத்திருக்கும் பாவிகளால் தமிழ்நாட்டிற்காவது தமிழர்களுக்காவது விடுதலை உண்டாகுமா? நேசப்பற்று, மொழிப்பற்று இல்லாதவர்களும் தன் குலநலத்தையே கருதுபவர்களுமான ஒரு கூட்டத்தாரால் நம் சமுதாய வாழ்க்கைக்கு எப்படி முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியும்? ஆதலால் இந்நிலையில் வருந்தேர்தலில் வாக்காளர்கள் (ஓட்டர்களின்) கடமை என்ன? வாக்காளர்கள் தங்கள் நிலைமையை நன்ருய் ஓர்ந்து பார்க்க வேண்டும் சமுதாய வாழ்க்கையில் நம்முடைய நிலைமையைத் தாழ்த்திச் சொல்லுபவரான எந்த பிராமணர் வாக்குரிமை கேட்ட போதிலும் அவருக்கு வாக்குரிமை மறுக்க வேண்டும். அவர் எவ்வித நன்மை செய்யப் போகிறதாய்ச்சொல்வோராயினும், அவருக்கு வாக்குரிமை கொடுக்கவே கூடாது. பிராமண வாக்காளர் பிராமணருக்கு வாக்குரிமை கொடுப்பதை எவரும் தடுக்க முடியாது. சூத்திரனென்று ஒருவனை சமுதாய வாழ்க்கையில், கேவலம் செய்து அவனுடைய சுக துக்கம் இன்னதென்று அவனுடன் ஒன்றி அறிய மாட்டாதபிராமணருக்கு வாக்குரிமை கொடுத்தால் தமிழன்பிராமணரல்லாத எந்த ஜாதியானுயிருந்தாலும், தன்னைதான் தாழ்த்தி கொண்டவனுகின்றான். தனது சுயமரியாதைக்கு துரோகம் செய்தவனுகிறான். "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்பதும் "முட்டி புகும், பார்ப்பார் அகத்தை எட்டிப்பாரோமே எந்நாளும் காப்பாரே வேளாளர்காண்." என்பதும் "கன்மனப்பார்ப்பனர் தங்களைப் படைத்துக் காகத்தை என்செயப் படைத்தாய்" என்பதும் "நூலெனிலோ கோல்சாயும், நுந்தமரேன் வெஞ்சமமாம், கோலெனிலோ ஆங்கே குடிசாயும் நாலாவான், மந்திரியும் ஆவன் வழிக்குத் துணையாவன், அந்த அரசே அரசு" என்பதும் "ஆறு கெட நாணலிடு ஊரு கெட நூலைவிடு" என்பதும் நமது பழம்பெரும் புலவர்களும் பெரியாரும் பாடியிருக்கும் அரிய உபதேச மொழிகள் அன்றோ பார்ப்பனர் குற்றங்களை எடுத்துச் சொல்வதான, வகுப்பு பிணக்குகள் அரசாங்கத்தாராலாவது நம்மாலாவது இன்று நேற்று ஏற்பட்டதா அல்லது ஆயிரகணக்கான வருஷத்துக்கு முன்பே ஏற்பட்டிருக்கிறதா என்பது ஷை முது மொழிகளை அறிந்தவர்களுக்கு நன்ருய் தெரியும். ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) வகுப்புப் பிரிவு ஏற்படுத்தின் காலத்திலேயே வகுப்பு துவேஷங்களுக்கு விதை நாட்டப்பட்டது.

தீண்டாமை.

ஆரியர்களுடைய கொள்கையின் மாய்கையில் சிக்கி அதையே ஒப்புக்கொண்ட தமிழ் மக்கள்

தங்களுடைய ஆதிக்கத்தையும், அதற்கடுத்தாப் போல் நிலை நிறுத்துவதற்காக கீழ் வகுப்பார்கள் எனவும், தீண்டாதவர் எனவும் சில மக்களை ஒதுக்கிவைத்ததை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் பலனாய் இப்பொழுது எங்கு பார்த்தாலும் தீண்டாமையே தாண்டவமாடி தத்திக் குதிக்கின்றது. ஐம்பொறி அடக்கல், ஆத்மநிவேதனம், ஆனந்த தெரிசனம் என்று சித்தர்கள் பாடியுள்ள ரகசியங்களைப் போக்கி தீண்டாமையே இந்து மதமாக ஒப்புக்கொண்டு நீ அவனைத் தொட்டால் தீண்டல், அவன் உன்னை தொட்டால் தீண்டல் ஆதலால் எல்லோரும் எங்களிடம் வாங்குங்கள் நாங்கள் செய்த பண்டங்களை வாங்கி சாப்பிடுங்கள் அதில் தீட்டில்லை. என்று சொல்லி ஓட்டலும் காப்பி பலகாரக் கடைகளும் வைத்து பார்ப்பனர் பிழைக்கத்தான் இப்போது பிராமண மதமும் தீண்டாமையும் உயிர் பெற்றிருக்கிறது. தீண்டாமைப் பேயின் கோரத்தை அடக்கவே எழுந்த மகான் மகாத்மா காந்தியாவர். தீண்டாமையை ஒழித்துவிட்டால் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்று சொல்லி ஒத்துழையாமை என்ற இயக்கத்தைப் பரப்பி அதன் மூலம் தீண்டாமை என்ற பேயைத் துறத்த வழி பார்த்தார், தன்னலம் கருதும் பார்ப்பனர் கூட்டத்தார் தீண்டாமை ஒழிந்தால் தம்மாதிக்கம், ஒழிந்துவிடும் என்ற பயத்தினாலும் தங்களுக்குள்ள மேலான பதவிகள் சமூதாய வாழ்க்கையில் தாழ்ந்துவிடுமென்ற பயத்தினாலும், தீண்டாமை என்றவுடன் மகானுடைய கருத்து முற்படா வண்ணமும் தங்களுடைய பதவிகளை ஊர்ஜிதப் படுத்தவும் கருதி அம் முயற்சியை ஒழிக்க சுயராஜ்யக் கட்சி என்ற ராக்ஷசனை உண்டாக்கி அவ்வியக்கத்தை விழுங்கச் செய்துவிட்டார்கள். அவ்விராக்ஷசனைக் கொண்டே காங்கிரசையும் ஜெயித்து அதைத்தங்களுக்கு அடிமையாக்கி அதன் மூலம் தமிழ் மக்கள் சுயமரியாதை பெறுவதற்கு விரோதமாகவும் தீண்டாமை ஒழிப்பதற்கு விரோதமாகவும் தமிழ் மக்களின் வாக்குரிமைஎன்னும் ஓட்டுகளைசூழ்ச்சிவலைபோட்டுஅரிக்கிருர்கள். இவ் வாக்குரிமையை சுயராஜ்யக் கட்சியால் விழுங்கப்பட்ட எந்தப் பார்ப்பனரல்லாதருக்கு கொடுத்தாலும் கூட அது தமிழ் மக்களின் விடுதலைக்குஎமனாய்த்தான்விளங்கும். இவர்களால் சுயராஜ்யமோ சுயமரியாதையோ வேறு எவ்வித நன்மையோ வருமென்று நினைப்பது கனவிற்கானும் கனவேயாகும்.கிராம வாழ்க்கை, சரீர பிரயாசை இன்னதுஎன்றறியாத ஜாதிகளிடமிருந்து கிராமத்தாருக்கு எவ்வளவு நலம் ஏற்படப் போகின்றதென்பது ஆண்டவனே அறிவான். அரசாங்கத்தாரோ அறுநூறு காத தூரத்திற்கு அப்பாலிருக்கிருர்கள். அவர்களுக்கு நம்முடைய பழக்கம், வழக்கந் தெரிந்து கொள்வதற்கு இடையூருக நிற்பவர்களாகிய ஆங்கிலம் படித்துஆதிக்கம்பெற்றுசுயநலம் நிறுத்துவதற்காக உழைக்கும்இப்பார்ப்பனர்களா தமிழர்களுக்குவழிகாட்டிகள்? தங்கள் இனத்தார்களேசகல பதவிகளையும் பெற்றுசிறிதேனும்சரீரப்பிரயாசையின்றி அன்னியன் உழைப்பில் சுலபமாகதங்கள்மேன்பாட்டை நிலை நிறுத்தக் கருதிக்கொண்டிருப்பவர்களா, தொழிலாளருக்கு சிநேகிதரும் பிரதிநிதிகளும் ஆவார்கள். ஆதலால் வாக்காளர்காள்! சுயநலம் கருதும் ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு பார்ப்பனருக்காவது உங்கள் அருமையான வாக்குரிமை கொடுக்கலாமா? அறியாமையாலோ கவலையீனத்தாலோ சுயநலத்தாலோ ஏமாற்றப் படுவதாலோ உங்கள் வாக்கை எந்தப் பார்ப்பனருக்காவது கொடுப்பீர்களேயா

நாகப்பட்டணம்.

நாகப்பட்டணத்தில் 1926ஆம் அக்டோபர் மாதம் 2, 3 தேதிகளில் சேனைத் தலைவர் மகாஜன ஐந்தாவது மகாநாடு கூடிற்று.

2ந் தேதியன்று காலை சென்னையிலிருந்து வந்த சபைத் தலைவர் மிஸ்டர் டி. கோபால் செட்டியாரையும் இதர ஊர்களிலிருந்து வந்த பிரதிநிதிகளையும் ஸ்ரீமான் கே. சி. சுப்பிரமணிய செட்டியாரும் உபசாரனைக் கமிட்டி மெம்பர்களும் வாலண்டியர்கள் புடைசூழ ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்று நாகையில் ஊர்வலத்துடன் அழைத்து வந்தார்கள். இந்த இராஜதானியின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 300 பிரதிநிதிகளுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். சாப்பாடு முடிந்து மாலை 3-மணிக்கு நாஷனல் ஹைஸ்கூல் கட்டிடத்தில் மகாநாடு கூடினார்கள், யாவருக்கும் மாலை சூட்டி உபசாரனைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் கே. சி. சுப்பிரமணியம் வரவேற்று உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள் என சங்கக் காரியதரிசி அறிவிக்கிருர்.

காந்தி திருநாள்.

ஆத்தங்குடி முத்துப்பட்டினத்தில் நாவுக்கரசு நற்சபையின் சார்பில் பல அன்பர்களால் மகாத்மா காந்தியடிகள் 58வது பிறந்த தினம் இம்மதி பதினேழாம் நாள் அன்னார் திருவுருவிற்கு புட்ப அலங்காரத்துடன் பூசனை புரிந்து ஐந்நூறு ஏழை மக்கட்கு அன்னமிட்டு கொண்டாடப் பெற்றது. அவர் சரிதம் படிக்கப் பெற்றது என காரியதரிசி சி. த. நாராயணன் தெரிவிக்கிருர்.

திருத்தம்

சென்றவாரம் நமது "குடி அரசு" 12வது பக்கம் சோழவந்தான் தேசியப்பள்ளிக்கூட 2-வது ஆண்டு விழா என்னும் தலைப்பின் கீழ் வந்துள்ள பெயர்களில் சோமசுந்தரம் பிள்ளை என்பதற்குப் பதிலாக ப வ. சோமசுந்தர நாடார் எனத்திருத்தி வாசிக்கவும்.

னால் கொள்ளிக் கட்டையை எடுத்து தலையைச் சொரிந்து கொண்டவர்களாவீர்கள். உங்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பாவீர்கள். காங்கிரஸ் போர்வையைப் போர்த்துக்கொண்டும் ஜனங்களுக்கு உழைப்பதாகப் பாசாங்கு பண்ணி சுயராஜ்யக்கட்சி என்று சொல்லிக்கொண்டும் ஏமாற்றவே பிராமணர் கிளம்பியிருக்கிருர்கள். இது சத்தியம்! சத்தியம்!! முக்காலும் சத்தியம்!!! இவர்கள் விஷயத்தில் பிராமணரல்லாத ஒவ்வொரு தமிழனும் இது சமயம் கண்டிப்பாய் ஏமாந்து போகாமல், ஜாக்கிரதையாகஇருங்கள். இக்கூட்டத்தாருக்குசுயநலமும் பதவி வேட்டையும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அழுத்தி ஆதிக்கம் பெறுவதே அடிப்படையான கொள்கை ஆதலால் ஏமாந்துவிடாதீர்கள். தொடரும்.

தனித்தமிழ் ரத்த ஓட்டமுள்ள தமிழன்.

கத்தரின்றி கதி மோக்ஷமில்லை.

இது நிச்சயம்! இது சத்தியம்!!

இந்திய சகோதர சகோதரிகளே!

ஒரு மனிதனோ, ஒரு குடும்பமோ, ஒரு ஜாதியோ, ஒரு மதமோ முன்னேற்றமடைய வேண்டுமாகில்; கைத்தொழிலாலன்றி வேறெவ்வகையிலும் முடியாது என்பது நிச்சயம்.

தற்சமயம் தலைசிறந்து விளங்கும் எந்தத் தேசத்தை எடுத்துப் பார்த்தாலும் அவைகள் கைத்தொழிலாலேயே முற்போக்கடைந்திருக்கின்றன வென்பது தெற்றென விளங்கும்.

இப்பொழுது நம் நாடு கீழான நிலைமையில் இருப்பதின் காரணமென்ன வெனில், கைத்தொழிலின்மையும், ஆதரிப்போரில்லாக் குறைவும் அதனை விருத்தி செய்யவேண்டியது தனது கடமை என்பதை உணராத அரசாங்கத்தின் ஆட்சியுமேயாகும்.

நாம் இளைஞர்களுக்குத் தற்கால வித்தியாலயங்களில் பிற்கால க்ஷேமத்திற்காதாரமான கைத்தொழிற் கல்வி புகட்டப்படுவதில்லை.

இக்கலாசாலைகளில் நம் வாலிபர்கள் நீண்ட நாட்கள் கல்விகற்று வெளியேறியவுடன் கவர்ன்மெண்டு உத்தியோகத்தையே நாடி ஓட வேண்டியிருக்கிறது. அங்கு இவர்களது மூத்த சகோதரர்கள் நிறைந்திருப்பதால் இவர்களுக்கு வேலை கிடைப்பதரிதாகிறது. இவர்களுக்கோ வேறு வேலை செய்யத்தெரியாது. ஐயோ, படித்தும் முட்டாள் பட்டமா? கடன் பட்டாவது பணம் வாங்கி மேலதிகார தேவதைகளுக்கு காணிக்கை வைத்து வேலை வாங்கப் பாடுபடுகிருர்கள். ஐயோ, மூடமதியே. "மானங் குலங்கல்வி வண்மையறிவுடைமை, தானம் தவமுயற்சி தாளாண்மை— தேனின், கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்து போம்." என்னும் ஆன்ருேர் வாக்கிற் கிணங்க பசியின் கொடுமையால் தங்கள் புருஷ லக்ஷணத்தையும் விற்றுவிடுகிருர்கள். ஐயோ கைத்தொழி வில்லாக் குறையே.

இந்திய மாதின் தவப் புதல்வர்களே!

நம்மை ஆண்டவன் இந்த நிலைமைக்கு கொண்டுவந்த பின்னும் நமக்கு சுயதேசப் பற்றும், உலக உணர்ச்சியை யறியும் சக்தியும் உண்டாவதில்லை என்ருல், நம்மை என் மற்றவர்கள் துரும்பாக மதித்து நடத்தமாட்டார்கள்.

குற்றத்தை நம்மிடம் வைத்துக்கொண்டு பிறரைப் பழிப்பது பைத்தியகாரன் செய்கையன்ருே!

அன்னிய நாட்டு உடையை அணிவோர்களுக்கு தேசபற்று வேருன்றி நிலைப்பதில்லை என்பதையறிந்தே மஹாத்மா காந்தியடிகள் கத்தர் இயக்கத்தை தோற்றுவித்தார்.

நீங்கள் உண்மையாளராகவும், சுதந்தர வீரர்களாகவும் இருந்தால் இன்றே கத்தர் ஆடைகளை கட்டுவீர்களென திட்டமாய்நம்புகிருேம்.

அறிவுடையோர்களே

நம்தேசத்தில் பணம் திரட்ட ஆசைகொண்ட அறிவிலிகளான போலித்தேசபக்தர்கள் பலரால் போலிக்கத்தர் உற்பத்தி செய்யப்படுகிறது. அவைகளை வாங்கி மோசம்போகாது தமிழ்நாடு கத்தர் போர்டு அத்தாக்ஷிப் பத்திரம் பெற்றவர்களிடம் கத்தராடைவாங்கி நம்தேசமக்களை காப்பாற்றுமாறு பணிவுடன் கேட்டுக் கொளுகிறேம்.

தங்கள் அன்பன்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
பிரஸிடெண்ட்,
நாடார் ஊழியப்பிரசார சபை,
மதுரை.

தென்னாட்டு ஜமீன்தாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

சென்னை மாகாண வடமத்தியபாக ஜமீன் தொகுதியான சித்தூர், செங்கல்பட்டு, சென்னை, கடப்பை, கர்நூல், பல்லாரி, அநந்தப்பூர் ஆகிய ஜில்லாக்களின் ஜமீன்தாரர்கள் பிரதிநிதியாக சென்னை சட்ட சபைக்கு, வரப்போகும் தேர்தலுக்கு கனம் பணக்கால் ராஜா அவர்களுக்குப் போட்டியாக சென்னை ஹைகோர்ட் வக்கில் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் என்கிற ஒரு பார்ப்பனர், ஜமீன்தார் என்கிற பேரால் நிற்கிற விஷயம் எல்லாரும் அறிந்ததே. சுமார் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே நாம் இதைப் பற்றி எழுதியுமிருந்தோம். ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமிஐயர் சட்ட சபைக்கு நிற்கும் நோக்கமெல்லாம் எவ்வகையிலாவது பணக்கால்ராஜாவை சட்ட சபையிலிருந்து துரத்தி விட்டுப் பார்ப்பன ஆதிக்கத்தைச் சட்ட சபையில் நிலைநிறுத்த வேண்டும் என்கிற எண்ணமே ஆதலால் பார்ப்பனரல்லாத ஜமீன்தாரர்கள் ஓட்டுக்களே 100க்கு 75 பேருக்கு மேலாக இருந்தும் பணக்கால் ராஜாவின் விரோதிகளான இரண்டொரு ஜமீன்தாரர்களின் ஆதரவையும், ஸ்ரீமான் அல்லாடி ஐயரின் வக்கில் உத்யோகத்தின் பலனைப் அடிமை கொண்ட சில ஜமீன்தாரர்களுடைய உதவியையும், மற்றும் கடனில் சிக்கி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் சில ஜமீன்தாரர்களுடைய நிலைமையையும் ஆதாரவாய்க் கொண்டு நிற்கத் துணிந்திருக்கிறார். ஆனால், இம்மூவித ஜமீன்தாரர்களோ ஆதாவது ஜமீனுக்கு ஜமீன் விரோதமும், ஜமீன்தாரர்களுக்குக் கோர்ட்டுகளில் விவகாரமும், ஜமீன்தாரர்களுக்குக் கடனும் ஆகிய இக்கஷ்டங்கள் ஜமீன்தாரர்களுக்கு மாத்திரமே அல்லாமல் மற்றும் இந்நாட்டிலுள்ள பெருங்குடி மக்களுக்கும் உண்டாவதற்கே காரண பூதர்களாயிருப்பவர்கள் நம் நாட்டுப் பார்ப்பனரும் பெரும்பாலும் பார்ப்பன வக்கீல்களுமேயாவார்கள், என்பது ஜமீன் சமூகம் அறியாததல்ல. அன்றி, இனியும், நம் நாட்டின் நமது பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்குள் இம்மாதிரியான கலகத்தையும் விவகாரத்தையும் அனாவசியச் செலவையும் ஏற்படுத்தி வைத்து அதன் மூலம் அவர்களைப் பலவிதத்திலும் தங்களுக்கு அடிமைப்படுத்தி வைத்துத்தான் வாழ வேண்டியிருக்கிறார்களே அல்லாமல் வேறு மார்க்கம் அவர்களுக்கு இல்லையென்பதும் உலகமறிந்த விஷயம். அப்படியிருக்க நம் நாட்டின் பழம் பெருங்குடி மக்களும், ராஜ வம்சத்தினரும் ஆன ஜமீன்தார் தொகுதிக்கு ஒரு பார்ப்பனர் அபேக்ஷகராக நிற்க நேர்ந்திருக்கிறதென்றால் அத்தொகுதியின் பிற்கால நிலைமையைப் பற்றியாரும் கவலைப்படாமலிருக்க முடியாது. புதிய சீர்திருத்த சந்தர்ப்பத்தில் ஜமீன்தாரர்களுக்கென்று தொகுதிகளை வகுத்து, அவைகளுக்கென்று சில ஸ்தானங்களையும் ஒதுக்கி வைத்தது இவ்வித வக்கீல் பார்ப்பனர்கள் கைப்பற்றுவதற்காகத்தானா? என்பதை ஒவ்வொரு ஜமீன்தாரரும் நடு நிலைமையிலிருந்து சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் அதன் உண்மை விளங்காமல் போகாது. ஜமீன்தாரர்களின் நன்மையை ஒரு வக்கில்—அதிலும் ஜமீன்தாரர்களின் ரத்தத்தை உறிஞ்சிப் பிழைக்கும் பார்ப்பனராயிருக்கிற ஒரு வக்கில் எவ்வழியில் பாது காக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. தவிரவும், ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமிஐயர்ஜமீன் தொகுதியின் மூலம் நிற்பதினுடையவும், அதிலும் பணகால் ராஜாவுக்குப் போட்டியாயிருப்பதினுடையவும் ரகஸ்யம் தான் என்ன? ஜமீன்தார் தொகுதியின் நன்மையை உத்தேசித்தா? அல்லது பணகால் ராஜா பேரில் உள்ள மனஸ்தாபத்தை உத்தேசித்தா? என்று பார்ப்போமானால், இவ்விரண்டும் அல்ல வென்பது நன்றாய் விளங்கும். எப்படியெனில் ஜமீன்தார் நன்மையிலோ வக்கில் ஐயருக்கு கவலை இருக்க நியாயமே இல்லை. பணகால்ராஜாவுக்கும் ஸ்ரீமான் ஐயருக்கும் நேரிட்டு விரோதம் இருப்பதாயும் சொல்லுவதற்கில்லை. ஆனால் வேறு காரணமொன்றிருக்க வேண்டும். அதென்ன வென்றால், தற்காலம் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கென்று ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனத்திற்கு பணகால் ராஜா தலைமை வகித்திருப்பதும், அத்தலைமையின் பலனைப் பார்ப்பன ஆதிக்கம் தடைப்பட நேர்வதுமாயிருக்கிற ஒரே எண்ணத்தாலேயே அவரை எப்படியாவது தலைமை ஸ்தானத்திலிருந்து விரட்டியடிக்கவேண்டுமென்கிற பெருங் கவலையோடு நமது நாட்டுப் பார்ப்பனர்களெல்லாம் ஒன்று கூடி சதியாலோசனை செய்து ஸ்ரீமான் அல்லாடி ஐயரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் நிற்கிறார். இதற்கு, ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார், டி. வி. வெங்கட்டராம ஐயர், சி. பி. ராமசாமி ஐயர் முதலிய பார்ப்பனர்கள் உள்உளவாக இருந்துகொண்டு ஜமீன்தாரர்களைப் பல வழிகளிலும் வேட்டையாடுகிறார்கள். அதன் ரகசியத்தை இதில் எழுதவே முடியாத மாதிரியில் இருப்பதோடு மற்றும் பலர் பணத்தை மூட்டை மூட்டையாக வைத்துக்கொண்டு ஜமீன்தாரர்களின் வீடுவீடாய் அலைகிறார்களெனவும் தெரிய வருகிறது. இப்பொழுது ஸ்ரீமான் அல்லாடி ஐயரின் வெற்றி ஜமீன்தாரர்களின் வெற்றியா அல்லது பார்ப்பனர்களின் வெற்றியா? என்பதும், பணகால் ராஜாவின் தோல்வி

(தொடர்ச்சி 10ம் பக்கம் 3ம் பத்தியில் பார்க்க)

"குடி அரசு" வாசகர்களுக்கு ஓர் உண்மையான முன்னறிவிப்பு.

———:0:———

அன்புள்ள வாசகர்களே!

இது சமயம் நமது "குடி அரசு" வாராவாரம் 4000 பிரதிகள் வரை போய்க்கொண்டிருந்தாலும், சட்ட சபைத் தேர்தல் தீர்ந்த அடுத்த வாரம் முதல் கொண்டே, சுமார் 1000 அல்லது 1500 பிரதிகள் திடீரென்று குறைந்து, சுமார் 2500 பிரதிகள் போலத்தான் போக நேரிடும். ஏனெனில், சட்டசபைத் தேர்தலின் பொருட்டு நமது பார்ப்பனர் செய்துவரும் பொய்ப் பிரசாரத்தை வெளிப்படுத்தவேண்டி, "குடி அரசு"க்கு முன்பணமாக, சந்தா வந்தாலும் வராவிட்டாலும் இதுவரை அனுப்பிக்கொண்டே வந்தோம் இதனால் பெருத்த நஷ்டமும் நேரிட்டிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. ஆதலால் சில பாக்கிதாரருக்கு மாத்திரம் வி. பி. பி மூலம் அனுப்பிப்பார்க்க விருக்கிறோம் தேர்தல் முடிந்தவுடன் வி. பி திருப்பியவர்களுக்கும், சந்தா பாக்கிதாரர்களுக்கும், முன்பணமனுப்பாதவர்களுக்கும் பத்திரிகைள் அனுப்பப்படமாட்டா. நிற்க, தேர்தல் முடிந்தபின்னர் நமது "குடி அரசு" அரசியலையே முக்கியமாய்க் கருதாமல் மக்களின் சுயமரியாதையைக் கெடுக்கும் பார்ப்பனியத்திற்கு ஆதாரமான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, இதிகாசம், புராணம் என்று சொல்லப்பட்ட ஆரிய சம்பந்தமான நூல்களிலும், செயல்களிலுமுள்ள தந்திரங்களையும், புரட்டுகளையும், பக்ஷபாதங்களையும், வஞ்சனைகளையும் தெள்ளத் தெளிய விளக்குவதோடு அந்நூல்களிலுள்ள விஷயங்களை நமது பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்திற்காக, எப்படி மறைத்தும், திருத்தியும், தப்பு வியாக்யானப் படுத்திக் கூறியும் நம்மை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும் முறையே வெளியிடுதலையே பிரதானமாய்க் கருதி தக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம் ஆதலால் சந்தா பாக்கியுள்ளவர்கள் சந்தாத் தொகையை அனுப்பியும், மற்றவர்கள் புதுச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் "குடி அரசை" ஆதரித்து அடுத்த மாத ஆரம்பத்திலிருந்தே வாசித்துவரவேண்டுமென நாம் மனப்பூர்வ விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஈ. வெ. இராமசாமி.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-௵ ஐப்பசி-மீ 1-உ

சோதனை காலம்.

சென்னை மாகாணத்தில் சிறப்பாய் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் பார்ப்பனீய ஆதிக்கத்தின் பலனாய் கட்டுக்குலைந்து, தாழ்த்தப்பட்டு, சுயமரியாதையை இழந்து, நாட்டின் நலத்தை மறந்து "மூல பலச் சண்டை" என்பது போல் தம்மில் ஒருவர்மேல் ஒருவர் பகைமை கொண்டு, அரசியலிலும் சமூக இயலிலும் மீளா அடிமையாகி உழல்வதைக் கண்ட பெரியார்களான ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர் தியாகராயர் மகாத்மா காந்தி ஆகியோர் முறையே பார்ப்பனரல்லாதார் இயக்கமென்றும் ஒத்துழையா இயக்கமென்றும் பல இயக்கங்களை தோற்றுவித்தனர். இவற்றை அறிந்த நமது பார்ப்பனர்கள் தங்களது கட்டுப்பாட்டாலும் செல்வத்தாலும் சூழ்ச்சியாலும் அதிகார வசதியாலும் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக்கொல்லவும், மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தை ஒழிக்கவும், முயற்சி செய்து வெற்றிக் குறியைக் கண்டுவிட்டார்கள் என்றே சொல்லலாம். பார்ப்பனரின் இவ்வெற்றிக் குறிக்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரை ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் போன்றார்களும் இந்தியாதேசத்தைப் பொறுத்த வரை தேசபந்து தாசரும் பார்ப்பனமாய்கையில் பட நேர்ந்ததே மூல காரணம் என்று சொல்வது எவ்வகையிலும் மிகையாகாது. எனெனில் 1917௵ வாக்கில் வகுப்புவாரிபிரதிநிதித்துவத்தை அடிப்படையாய்க்கொண்டு ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கென ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தை ஒழிப்பதற்கென்றே பார்ப்பனரால் பார்ப்பனர் பண உதவியில் அதே வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தையேஅடிப்படையாக வைத்து "சென்னை மாகாணச் சங்கம்" என்கிற போலிப்பார்ப்பனரல்லாதார் கட்சி ஒன்றை ஆரம்பிக்கஸ்ரீமான்கள் டாக்டர் நாயுடு, முதலியார் போன்றார்கள் ஆதரவாயில்லாதிருந்தால் ஜஸ்டிஸ் கட்சி இதுவரை அது ஏற்றுக் கொண்ட வேலையின் பலனை நமக்களிக்காமல் இருந்திருக்க நியாயமே இல்லை. இக் கனவான்கள் இப்போதைய ஜஸ்டிஸ் கட்சியை குறை சொல்ல காரணம் கண்டு பிடிப்பதாயிருந்தாலும் டாக்டர் நாயர் சர். செட்டியார் ஆகிய கனவான்களையும் அவர்கள் ஆரம்பித்த அடிப்படையான நோக்கங்களையும் பல தடவைகளில் ஒப்புக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அக்கட்சியில் தங்களுக்கு குற்றமாய்த் தோன்றும் பாகங்களை திருத்த கொஞ்சமும் முயலாமல் அதன் எதிரிகளுக்கு அனுகூலமாயிருக்கும்படி மேலும் மேலும் அக்கட்சியைக் குற்றம் சொல்லிக்கொண்டும், பாமரஜனங்களுக்கு அதனிடை வெறுப்பும் அதன் எதிரிகளிடை அன்பும் உண்டாகும்படியும் செய்து வருவது நாட்டினுடையவும், தமிழ் மக்களினுடையவும் நல்ல காலமின்மையையே காட்டுகிறது.

இவ்விஷயம் சென்றவாரம் தமிழ்நாடு ஆபீசில் கூடிய தேசிய மகாநாடு என்னும் கூட்டத்தின் நடவடிக்கைகளைக்கவனித்தவர்களுக்கு விபரம் நன்றாய் விளங்கும் அதன் அறிக்கையின் சுருக்கமாவது:—

சுயநலம் கருதும் தனி நபர்களும், கட்சியாளரும் தங்களுக்குச்சாதகமாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஒரு கட்சி சமூக சுதந்திரத்தையும் மற்றொரு கட்சி அரசியல் சுதந்திரத்தையும் மறுத்து வருகின்றன.

ஒத்துழையா இயக்கம் நிறுத்தப்பட்ட பின்னர் தேசியவேலை திட்டத்தில் சமூக வேலையை சுயராஜ்யக் கட்சியினர் கைவிட்டுவிட்டனர்.

சுயராஜ்யக் கட்சி பிராமண வகுப்பிற்கு அதிக சலுகை காட்ட ஆரம்பித்துவிட்டது.

ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற உத்தேசத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

அத்திட்டத்தை நிறைவேற்ற அது ஒன்றும் செய்யவில்லை.

பிராமணர்களுக்குப் பதிலாகப் படித்த பிராமணரல்லாதாருக்கு வேலை செய்து கொடுக்கவே இவர்கள் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்த முயற்சியில் வகுப்பு உரிமையை உத்தேசித்து அரசியல் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்து விட்டது.

என்ற குறிப்புகளுடன்,

"இரு கக்ஷிகளையும் பொதுஜனங்கள் ஆதரிக்கக்கூடாது என்றும் தனிப்பட்ட மனிதர்களின் யோக்கியதையைப் பொறுத்து ஓட்டுச் செய்ய வேண்டுமென்ற கருத்து அடங்கிய ஒரு தீர்மானமும் செய்ததோடு ஏறக்குறைய அவ்விரு கட்சிகளின் வேலைத்திட்டங்களையே தங்களது நோக்கமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசினால் ஒப்புக்கொள்ளப் பட்ட கட்சியாகிய சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்வதற்கும், அதற்கு விரோதமாக வேலை செய்வதற்கும் தேசியக்கட்சி என்பது தீர்மானம் செய்திருக்கிறதைப் பார்க்கிறபோது சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தை ஒப்புக்கொண்ட காங்கிரஸ் தேசியசபை அல்லவென்பதையும், அக்காங்கிரசை தேசியக்கட்சி ஒப்புக்கொள்ளவில்லை என்பதையும், தைரியமாகவெளியிலெடுத்துக் காட்டி விட்டதைப்பொறுத்த வரையில்நாம் அதைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை எந்த ஆதாரத்தைக் கொண்டு தேசியக் கட்சி என்பது குற்றம் சொல்லுகிறது? என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. தேசியக் கட்சிக்கு தனிப்பட்ட மனிதர்கள் நடவடிக்கை பிடிக்கவில்லையா? அல்லது கட்சிகள் கொள்கைகள் பிடிக்கவில்லையா? என்பதே நமக்கு விளங்கவில்லை தனிப்பட்ட மனிதர்கள் நடவடிக்கை பிடிக்கவில்லையானால் கட்சிகளைக்கைப்பற்றிஅம்மனிதர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு கட்சிகளை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் செய்யவேண்டும் அல்லது மனிதர்கள் பிடித்து கட்சிகள் பிடிக்கவில்லையானால் அம்மனிதர்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு கட்சிகளை ஒழிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் இன்ன கட்சியின் இன்ன கொள்கை தப்பு என்று அறிவிக்காமலும் இன்ன கட்சியைச் சேர்ந்த இன்னாரின் நடவடிக்கை தப்பு என்று அறிவிக்காமலும் கண்களை மூடிக்கொண்டு அந்த கொள்கைகளையும் அந்த மனிதர்களையுமே குற்றம் சொல்லிக் கொண்டு வேறு கட்சி என்று ஒன்றை ஆரம்பிப்பதில் நாட்டுக்கோ அல்லது குறிப்பிட்ட சமூகத்திற்கோ என்ன லாபம் என்பது விளங்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர் அரசியல் விஷயத்தில் இந்த தேசியக் கட்சியார் என்போர் கோருகிறசுயராஜ்ஜியத்தைத் தான் அதி விரைவில் அடைய வேண்டும் என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமூக விஷயத்திலும் இந்த தேசியக் கட்சியார் நோக்கத்தை விட ஒருபடி அதிகமாகவே தங்களது கொள்கையாகவும் வைத்துக் கொண்டிருப்பதோடு பார்ப்பனஆதிக்கத்திற்கு அநுகூலமாக பார்ப்பனர் கைப்பற்றி இருக்கும் உத்தியோகங்களையும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு அநுகூலமாக கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள். இப்படி இருக்க எந்த வகையில் ஜஸ்டிஸ் கட்சி பிற்போக்கானது என்பதையும் எந்த விதத்தில் அது ராஜிய சுதந்தரத்தை மறுக்கிறது என்பதையும் தேசியக் கட்சி என்பது பொது மக்களுக்கு விளங்க வைக்கவில்லை. அன்றியும் சமூகமுன்னேற்றத்துடன்ஆரம்பிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி அத்திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று தேசிய அறிக்கை சொல்லுகிறது. எவ்வகையில் அது நிறைவேற்றிவைக்கவில்லை என்று சொல்ல முடியுமா? சமூக முன்னேற்றத்திற்காக முதலாவதாய் வகுப்புவாரி திட்டத்தை வலியுறுத்துகிறது. தனது சமூகத்தாருக்குப் பார்ப்பனர்கள் போலவே அரசியலில் உத்தியோகம் கிடைக்கப் போராடி வருகிறது; சில துறைகளில் செய்து மிருப்பதாய் தேசிய அறிக்கையே ஒப்புக்கொள்ளுகிறது; சமத்துவத்திற்கும் மத வித்தியாச மின்மைக்குமாக மலையாளக் குடிவார மசோதா, தேவஸ்தான மசோதா

முதலியன கொண்டு வந்து நிறைவேற்றியுமிருக்கிறது. மது விலக்கு தீண்டாமை விலக்கு முதலியவற்றிற்கும் இப்போதைய நிலைமையில் தன்னால் கூடுமானதைச் செய்துமிருக்கிறது.

நிற்க வகுப்புரிமையை உத்தேசித்து அரசியல் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்ததாய் தேசீய அறிக்கை சொல்லுகிறது. எந்த விதமான சுதந்திரத்தை ஜஸ்டிஸ் கட்சி விட்டுக் கொடுத்தது? அதுவுமல்லாமலும் தற்கால அரசியல் நிர்வாகத்தில் வேறு எந்தக் கட்சியாவது "சுதந்தரத்தை" விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி நிறுத்திக் கொள்ளத்தக்க சுதந்திரமுள்ள அரசியல் கட்சி ஏதாவது இருக்கிறதா என்று தேசிய அறிக்கை சொல்லமுடியுமா?

ஆகையால் தேசிய அறிக்கை என்னும் போரால் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி குற்றம் சொல்லி இருக்கும் விஷயங்கள் அவ்வளவும் அர்த்தமற்றதும் பொருத்தமற்றது மென்றேதான் சொல்லவேண்டியிருக்கிறதே அல்லாமல் அதில் ஒரு சிறிதும் உண்மையும் நியமும் இல்லை என்றே சொல்லுவோம். இம்மாதிரி ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அர்த்தமற்ற தேசீயத்தின் பெயரையும் பொறுப்புள்ள சமூகத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் புறப்பட்டு அதற்கு தேசீயக் கட்சி யென்றும் பெயர் வைத்துக்கொண்டு தங்கள் மனம் போனபடி காரியங்களை நடத்துவதென்பது தமிழ் நாட்டிற்கும் தமிழ்மக்களுக்கும் சோதனை காலம் என்றே சொல்ல வேண்டும். நமது நாட்டின் பொல்லாத வேளையின் பலனாக ஓட்டுரிமை இன்னது என்பதையேநமது பாமர மக்களான 100க்கு 90 பேர் இன்னமும் அறிந்துகொள்ள முடியாமலே செய்து வந்திருக்கிறோம். ஓட்டுரிமை அறிவிக்காமலே போலி அரசியலின் பேரால் பாமர மக்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுத்ததானது இப்போது நமது நாடும் நமது சமூகமும் அடிமைப்படவும், சுயமரியாதை இழக்கவுமேதான் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எப்படியெனில் நமது நாட்டில் பார்ப்பனர்களுக்கும் ஓட்டு இருக்கிறது பார்ப்பனரல்லாதாருக்கும் ஓட்டு இருக்கிறது. பார்ப்பன ஓட்டுகள் கண்டிப்பாய் பார்ப்பனர்களுக்கே போகிறது. அதுபோல் பார்ப்பனரல்லாதார் ஓட்டுகள் பார்ப்பனரல்லாதாருக்குப் போவதில்லை. பார்ப்பனர்களால் ஏமாற்றப்பட்டு பார்ப்பனருக்கே போகக்கூடிய நிலையிலேயே இருக்கிறது. உதாரணமாக திருச்சி ஜில்லா போர்ட் பிரசிடெண்ட் தேர்தலில் 100க்கு 80பேருக்கு மேல் பார்ப்பனரல்லாத மெம்பர்களாக இருந்தும் ஒரு பார்ப்பனர்தான் வெற்றி பெற்றார். சென்ற சட்டசபை தேர்தல்களிலும் கோயமுத்தூர், தஞ்சை, தென் ஆற்காடு, திருச்சி, சென்னை முதலிய ஜில்லாக்களில் 100க்கு 90பேருக்கு மேலாக பார்ப்பனரல்லாத ஓட்டர்களே இருந்தும் பார்ப்பனர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எந்தவழியில் தோல்வியுற்ற பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களை விட வெற்றி பெற்ற பார்ப்பன அபேக்ஷகர்கள் சிறந்தவர்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. சென்ற தேர்தலில் கோயமுத்தூர் ஜில்லாவில் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் தோல்வியுற்றார். ஸ்ரீமான் சி. வி. வெங்கட்ரமணய்யங்கார் வெற்றி பெற்றார். இதில் ஸ்ரீமான் முதலியாரைவிட ஸ்ரீமான் அய்யங்கார் எந்தவிதத்திலாவது உயரிய கொள்கையையோ நோக்கமோ உடையவர் என்று யாராவது சொல்லமுடியுமா சென்ற தேர்தலில் இந்த ஸ்தானத்திற்கும் ஸ்ரீமான் முதலியாரைத் தெரிந்தெடுத்திருந்தால் தேவஸ்தானசட்டத்தை எதிர்க்க பார்ப்பனக் கட்சிக்கு ஒரு நபர் அதிகமாக இருக்குமா அல்லது ஸ்ரீமான் அய்யங்காரை தெரிந்தெடுத்த ஓட்டர்கள் அய்யங்காரை தேவஸ்தான சட்டத்தை எதிர்க்கச் சொன்னார்களா எதிர்க்க ஆசை கொண்டவர்களா மறுபடியும் தான் ஸ்ரீமான் அய்யங்கார் நிற்கிறார். இம்மாதிரியே தென் ஆற்காடு ஜில்லா ஓட்டர்களும் அந்த ஜில்லா பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் ஒரு அய்யங்காரை தேவஸ்தான சட்டத்தை எதிர்க்கச் சொன்னார்களா அந்த ஜில்லாவின் சார்பாய் இவ்வருஷமும் அதே அய்யங்கார் நிற்கிறார். மற்றும் சில ஜில்லாக்களிலும் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்த அய்யர் அய்யங்கார்கள் போட்டியன்னியில் கூட தெரிந்தெடுத்ததாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது, நமது ஓட்டர்களை நாம் சரியானபடி அவர்கள் ஓட்டுரிமையை அறியும்படி செய்யவில்லை என்பதை காட்டுகிறதா இல்லையா இம்மாதிரி பாமர ஜனங்களிடத்தில் மறுபடியும் குழப்பமான தேசீய அறிக்கைகளும், தேசீய கட்சிகளும் புறப்பட்டால் "கீழேவிழுந்த குழந்தைக்கு அரிவாமணை உதவியது" போல் பார்ப்பனரல்லாத பாமர ஓட்டர்களை அவர்களுக்கு சமத்துவமும் சுயமரியாதையும் கொடுக்க இஷ்டமில்லாத அவர்களது எதிரிகள் ஏமாற்ற அனுகூலமாயிருக்குமென்பதில் சந்தேகமென்ன. அல்லாமலும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸதிரிகள் காங்கிரஸ விளம்பர சபை என்னும் பெயராலும் ஏ. ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸகாரியதரிசி என்னும் பெயராலும் எஸ். சீனிவாசய்யங்கார் காங்கிரஸ தலைவர் சுயராஜ்யக் கட்சியின் தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ கமிட்டியின் தலைவர் தென்னாட்டுத் தியாக மூர்த்தி என்னும் பெயராலும் சி. ராஜகோபாலாச்சாரியார் தென்னாட்டு காந்தி என்னும் பெயராலும் சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் பருத்திச்செடி அய்யர்; தர்மப்பிரபு என்னும் பெயராலும் அல்லாடிகிருஷ்ணசாமி அய்யர் ஜமீன்தார் என்னும் பெயராலும் எம். கே. ஆச்சாரியார் காந்தி சிஷ்யர் என்னும் பெயராலும், சி. பி. ராமசாமி அய்யர் சட்ட மெம்பர் என்னும் பெயராலும் டி. ஆர். வெங்கிட்டராம சாஸதிரிகள் அட்வொகேட் ஜனரல் என்னும் பெயராலும், மகாமகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் கோகலேவுக்கு பின் வந்தவர் என்னும் பெயராலும் மற்றும் எத்தனையோ பார்ப்பன கனவான்கள் ஐகோர்ட்டு ஜட்ஜி முதல் அட்டெண்டர் என்னும் பதவிகள் பெயராலும் சென்னையில் சில காலிகள் காங்கிரஸ தொண்டர் என்னும் பெயராலும் சில தொழிலாளர்கள் சுயராஜ்யம் என்னும் பெயராலும் சில போலீசு அதிகாரிகள் சமாதானம் ஒழுங்கு என்னும் பெயராலும் சில பார்ப்பனரல்லாத தலைவர்கள் வாயைமூடி வேடிக்கை பார்த்துக்கொண்டும் சிலர் காங்கிரஸ கட்டளையின் பெயராலும். சிலர்தேசம், அரசியல், உரிமை, சுயராஜ்யம், சுதந்திரம், சர்க்காரை எதிர்த்தல் அதிகார வர்க்கத்துடன் போர் புரிதல் என்னும் வார்த்தைகள் பேராலும் செய்துவரும் திருவிளையாடல்கள் போதாதென்று தேசீயக் கக்ஷி என்று ஒன்று புறப்பட்டிருப்பது தமிழ் நாட்டினுடையவும் தமிழ் மக்களுடையவும் நெருக்கடியான சோதனை காலம் என்றே சொல்லுவோம். இந்த சோதனை காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ்மக்களையும்இயற்கை தேவிதான்காப்பாற்றவேண்டும்.

ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரியார்.

கொல்லத் தெருவில்

ஊசி விற்பனை.

மகா மகா கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் வரப்போகும் தேர்தலில் பார்ப்பனர்களுக்கு வெற்றி கிடைப்பதற்காக ஊர் ஊராய்ப் பிரசங்கம் செய்து வருகிறார். இந்த முறையில் கோயமுத்தூருக்கும் வந்து மாணவர் சங்கத்திலும் "வகுப்பு வாதத்தால் ஏற்படும் தீங்கு" என்பதைப்பற்றிப் பேசியிருக்கிறார். வகுப்பு வாதத்திற்கு ஏற்பட்ட கட்சி, தன்னை ஜனநாயகக்கட்சி என்றும், தேசீயக் கட்சி என்றும் சொல்லிக் கொள்வது தகாது என்றும், இதைப்போல் இந்திய ராஜீயத் துறையில் அதிகமான கேட்டை விளைவிப்பது வேறெதுவுமில்லை என்றும்கூறுகிறார்.

இதில் எவ்வளவு புரட்டுகள் இருக்கின்றன என்பதை யோசியுங்கள். முதலாவது ஸ்ரீமான் சாஸ்திரி இந்திய மக்களின் சார்பாகப் பேசுவதற்கே யோக்கியதை அற்றவர் என்பதே நமது அபிப்பிராயம். அவர் நமது சர்க்காருக்கு உள் உளவாயிருந்து தனக்குப் பெரிய அந்தஸ்தும் பட்டமும், பதவியும் பெற்றுக்கொண்டு தன்னுடைய பிள்ளை குட்டிகளுக்கும் பெரிய பெரிய உத்தியோகத்தை வாங்கிக் கொண்டவர். அல்லாமலும், தேசத்திற்காகவும், ஜனநாயக தத்துவத்திற்காகவும் பாடுபடவந்த அவதார மூர்த்தியாகிய மகாத்மா காந்தியை "அராஜகர்" என்றும் அவரை சும்மா வைத்துக்கொண்டிருந்தால் ராஜ்ஜியமே கெட்டுப்போய் விடும் என்றும் சர்க்காருக்கு உபதேசித்து அவரை ஜெயிலில் வைக்கச் சர்க்காருக்கு உதவியா யிருப்பதற்காக பதவி பெற்றவர். ஜனநாயக தத்துவம் முறையே அடைவதற்காக பாரதமாதா முடிவு செய்து கொண்டு அதன் மக்கள் பதினாயிரக் கணக்கான பெயரை ஜெயிலுக்குள் தள்ளிக் கொண்டிருக்கும்போது வெள்ளைக்காரருக்கு அநுகூலமாய்ப் பேசிக்கொண்டும் மகாத்மாவை அடக்கினால்தான் இவ்வியக்கம் அடங்குமென்றும் சொல்லிக்கொண்டு தான் மேல்நாடுகளில் உல்லாசப் பிரயாணம் செய்து வெள்ளைக்காரருடன் விருந்துண்டு கொண்டு கேளிக்கையாயிருந்தவர். ஜனநாயக தத்துவத்திற்காக நாளிதுவரை ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரியாரால் ஒரு காதொடிந்த ஊசிக்குச் சமானமான உதவியாவது உண்டா? வகுப்பு வாதம் கூடாது என்று சொல்ல பிராமணருக்கு யோக்கியதை ஏது? பிராமணன் வகுப்பு வாதத்தையே அடிப்படையாகக் கொண்டவன்; எப்பொழுது ஒரு மனிதன் தான் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுகிறானோ அப்பொழுதே அவனிடத்தில் தன்னுடைய வகுப்பு உயர்ந்த வகுப்பு மற்றவர்கள் தன்னிலும் தாழ்ந்த வகுப்பு என்கிற வகுப்பு வாதம் இருக்கிறதா இல்லையா? முதலில் தான் அதை விட்டுவிட்டு பார்ப்பனர்களையும் அதை விடச் செய்த பிறகு வகுப்பு வாதம் கூடாது என்று உபதேசிக்க வந்தால் அப்போது ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு பேச உரிமை-

கோயமுத்தூர் ஜில்லா தேர்தல்

கோயமுத்தூர் ஜில்லாவின் சார்பாக சென்னை சட்ட சபைக்குப் பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்கள் மூன்று பேரும், பார்ப்பன அபேக்ஷகர் ஒருவரும் ஆக நான்கு அபேக்ஷகர்கள் நிற்கிறார்கள். இந்நான்கு கனவான்களும் பெயருக்கு மாத்திரம் தனித் தனிக் கக்ஷியைச் சேர்ந்ததாகச் சொல்லிக் கொண்டாலும் தத்துவத்தில் பார்ப்பனரல்லாத கக்ஷிக்கு மூன்று பேரும், பார்ப்பனக் கட்சிக்கு ஒருவருமாய் இருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். உதாரணமாக ஸ்ரீமான் அய்யங்கார் தேவஸ்தான மசோதாவையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் எதிர்ப்பதனாலும் ஸ்ரீ செட்டியார் முதலானவர்கள் இவ்விரண்டையும் மனப்பூர்வமாய் ஆதரிப்பதினாலும் தெரிந்து கொள்ளலாம். நாம் இதற்குமுன் பல தடவைகளில் எழுதி வந்தது போலவே சட்ட சபைகள் மூலம் குடிமக்களுக்கு எவ்வித அரசியல் நன்மையும் செய்யமுடியவே முடியாது என்பதை இப்பொழுதும் சொல்லுகிறோம். ஆனால் வேளாள குடிமக்கள் இந்நாட்டில் உள்ள மற்ற எல்லா மக்களைவிட உயர்ந்த தன்மை உடையவர்களாயிருந்தாலும் பார்ப்பன ஆதிக்கத்தில் சிக்கி விவகாரம் முதலியவைகளால் குடி கெடுவதையும் வைதிகச்சடங்குகளால் தாழ்த்தப்பட்டு அடிமைகளாவதிலிருந்தும தப்புவிக்க உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லுவோம். ஆனால் பல காரியங்கள் செய்திருப்பதாய் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் போன்ற பல பார்ப்பனர்கள் பத்திரிகைகள் மூலமும், விளம்பரங்கள் மூலமும் பறையடிப்பதெல்லாம் குடியான மக்களை ஏமாற்றச் செய்யும் வெறும் மோசடியே தவிர வேறில்லை. அதுபோலவே அதைப்பார்த்து பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களும் குடியானவர்களை ஏமாற்றப் பார்ப்பனர்களைப் பின்பற்றி பொய் விளம்பரம் செய்யவேண்டி ஏற்படுகிறது. உண்மையில் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் போன்றவர்கள் வெளிப்படுத்தி இருக்கும் வேலைகளின் இரகசியங்களை அறிந்தால் அது ஸ்ரீமான் அய்யங்காரால் நடந்ததா அல்லது ஸ்ரீமான்கள் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் போன்றவர்களின் பிரயத்தனத்தால் நடந்ததா என்பது நன்றாய் விளங்கும். ஸ்ரீமான் அய்யங்கார் விளம்பரம் செய்து கொள்வதில் அதிக ஆசை உள்ளவராகவும் அதைப்பற்றி பிரத்தியார் தன்னை எவ்வளவு கேவலமாகப் பேசினாலும் அதை கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் எப்படியாவது சட்ட சபைக்குப் போனால் போதும் என்கிற கவலை உள்ளவருமானதால் எவ்வளவு தூரம் குடியானவர்களை ஏய்க்கலாமோ அவ்வளவு தூரம் விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார். ஸ்ரீமான்கள் செட்டியாரும், முதலியாரும், தங்களைப் புத்திசாலிகள் கேவலமாய் நினைப்பார்களே என்று பயப்படுவதாலும் தற்புகழ்ச்சி செய்துகொள்ள வெட்கப்படுவதாலும் அவர்களின் உண்மையான பெருமைகளும் செய்த வேலைகளும்கூட வெளியாருக்குத் தெரிவதற்கிடமில்லாமல் இருக்கிறது. ஸ்ரீமான் வேணுடையாக் கவுண்டர் அவர்களுக்கு இதில் அநுபோகமில்லாததாலும், அவரும் விளம்பரம் செய்துகொள்ள வெட்கப்படுவதாலும் அவரது நிலைமையும் சரிவர ஓட்டர்கள் உணர்வதற்கில்லாமல் இருக்கிறது. ஆதலால் பார்ப்பனரல்லாத ஓட்டர்கள் வெறும் விளம்பரங்களைக் கண்டு ஏமாறாமல் பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களையே ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். குறிப்பாய் இச்சில்லா வேளாள கவுண்டர் கனவான்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்களுடைய ஓட்டுகளைப் பார்ப்பன அபேக்ஷகருக்குக் கொடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தங்கள் வகுப்புத் தலைவராகிய ஸ்ரீமான் பட்டக்கார் வேணுடையாக் கவுண்டர் அவர்கள் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்படுவதைக் கண்டிப்பாய் தடைப்படுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

உண்டு. தங்கள் வகுப்பு உயர்ந்த வகுப்பு என்பதைப்பற்றி யாரும் ஆக்ஷேபிக்கக் கூடாது; அது அப்படியே இருக்க வேண்டும்; அதற்கு வேண்டிய பிரயத்தனமும் செய்ய வேண்டும்; மற்றவர்கள் மாத்திரம் வகுப்பைப்பற்றி பேசக்கூடாது; தாழ்ந்த வகுப்பாராகவே இருக்க வேண்டும் என்று சாஸ்திரியார் கனவு கண்டால் அதற்கு மற்றவர்கள் இடம் கொடுப்பார்கள் என்று சாஸ்திரியார் நினைக்கிறார் போல இருக்கிறது. அல்லாமலும் பிராமணனால்தான் வகுப்பு வாதம் ஏற்பட்டது. ஆதலால் அவனிடத்தில் இருப்பதை ஒழித்தால் தான் வகுப்புப் பிசாசு நம் நாட்டை விட்டுத் தொலையும் என்று நாம் சொல்லும்போது பிராமணன் வந்து இதில் நியாயாதிபதியாயிருக்க இடமேது? திருடனையே தன் திருட்டுக்கு நியாயாதிபதியாய் வைத்தால் அவன் தன்னை தண்டித்துக்கொள்வானா? அதுபோல் பார்ப்பனன் குற்றவாளி என்றால் பார்ப்பனனே வந்து நான் குற்றவாளி அல்ல என்று தீர்ப்புச் சொல்லிக் கொள்ள பாத்தியமேது? சாஸ்திரியார் பார்ப்பனன் என்கிற முறையில் வேண்டுமானால் தன்னிடம் குற்றமில்லை என்று வாதாடிக் கொள்ளலாமே யொழிய தான் நடு நிலைமைக்காரர் போல் வேஷம் போட்டுக் கொண்டு மாணவர்களுக்கு உபதேசம் பண்ண யோக்கியதை ஏது என்றுதான் நாம் கேட்கிறோம். ஆனால் இதிலும் அதிகமான பார்ப்பன சூழ்ச்சிகளைக் கண்டு தேறியிருக்கும் கோவை பார்ப்பனரல்லாத மாணாக்கர் முன்னிலையில் பார்ப்பன சாஸ்திரியாரின் உபதேசம் கொல்லத் தெருவில் ஊசி விற்கப்போனதற்குச் சமானமே யொழிய, வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

திருவாரூர் "கமலைச் செந்தமிழ்ச் சங்கம்"

இச் சங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவு விழா 17—10—26-ல் திருவாரூர் போர்டு ஹைஸ்கூலில் திருவாளர் பா. வா. சொ. வைத்திலிங்க முதலியாரவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என காரியதரிசி திருவாளர் கொ. ரா. ம. வி. விசுவநாதம் பிள்ளை அவர்கள் அறிவிக்கிறார்.

மார்க்கெட் நிலவரம்.

(சித்திர புத்திரன்.)

சட்ட சபை ஓட்டு ஒன்றுக்கு
1 முதல் ரூ. 5.

ஒரு கிராமத்தின் மொத்த ஓட்டுகளுக்குமணியகாரருக்கு ரூ. 100.
கணக்குப் பிள்ளைக்கு ரூ. 50.
பள்ளிக்கூடஉபாத்தியாயருக்கு ரூ. 25.

கிராமாந்தரங்களில்செல்வாக்குள்ள குடித்தனக்காரருக்கு
ரூ. 5000 முதல் 15000.
வரை கடன்.

முனிசிபல் சேர்மென்களுக்கு
ரூ. 1000 முதல் ரூ. 1500.
வரை கடன்.

வைஸ் சேர்மென்களுக்கு
250 முதல் ரூ. 500.

போலிஸ் ஆபீசர்கள் நிலவரம் பஜாரில் இன்னும் புதுச்சரக்கு வராததால் வாங்குவாரில்லை.

முனிசிபல் ஓட்டுகளுக்கு இவ்வாரம் ஓட்டுஒன்றுக்கு ரூ, 5 முதல் ரூ. 15.
சேர்மென்களுக்கு ரூ. 150.
வைஸ் சேர்மென்களுக்கு ரூ. 250.

20 ஓட்டு 30 ஓட்டுள்ள தொகுதிகளில்ஓட்டு ஒன்றுக்கு 150 ரூ.
முதல் ரூ. 250.

போலிஸ் ஆபீசர்கள் விஷயம் கேட்பவருக்கு மாத்திரம் தெரிவிக்கப்படும்.

பஜார் நோக்கம் இன்னமும் துகை உயரும்போல் இருக்கிறது.

7-ம் பக்கத் தொடர்ச்சி.

தனிப்பட்ட அவருடைய சொந்தத்தோல்வியா அல்லது பார்ப்பனரல்லாத சமூகத்தினுடையவும் ஜமீன்தார் தத்துவத்தினுடையவும் தோல்வியா? என்பதையும் இந்நாட்டுப் பொதுக்குடி மக்களின் பொறுப்புள்ள தலைவர்களாகிய ஜமீன்தார் சமூகத்தார் உணர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். தேர்தல் தீருகிற வரையிலும் நமது பார்ப்பனர்கள் ஜமீன்தாரர்களை எஜமானரென்றும், ராஜாவென்றும், மஹாராஜாவென்றும் தலைவரென்றும் சொல்லி ஏமாற்றுவார்கள். தேர்தல் தீர்ந்தவுடனே அவர்களுடைய வாசலில் போய் நின்றால் கூட, நீ யார்? எந்தஊர்? என்று தான் கேட்பார்கள். இந்த ஒரு முக்கியமான தென்னாட்டின் சோதனை காலத்தில், ஜமீன்தார் பிரபுக்கள் தங்களுடைய பொறுப்புகளைப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கு விற்றுவிடுவார்களேயானால் தங்கள்ஜமீன்தார்சமூகத்தைத் தாங்களே கெடுத்துக் கொள்வதோடல்லாமல், பார்ப்பனரல்லாதாரின் உயிர் நாடியைப் பார்ப்பனர் கையில் கொடுத்து நசுக்கிக் கொல்லச் செய்தவர்களே ஆவார்கள். ஆதலால் ஜமீன் பிரபுக்களே இத்தேர்தலில் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாத உங்கள் பிரதிநிதியையே ஆதரித்துப்பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான் எஸ். சீநிவாச அய்யங்கார் அவர்கட்கு

(கைவல்லிய சாமியார் எழுதும் கடிதம்).

ஐயா

தாங்கள் பெத்துநாய்க்கன் பேட்டையில் செய்த பிரசங்கத்தில் தங்கள் தன்மையையும், சாமர்த்தியத்தையும் சொல்லிக்கொண்டு வந்த பொழுது, தங்களுக்குத் தெரிந்தே மனச் சாட்சிக்கு நேர் விரோதமாகப் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் சொல்லுவதற்கு நேர் விரோதமாக உங்கள் நடவடிக்கையிருப்பது உங்கள் மனதிற்குத் தெரியும். தெரிந்திருந்தும், சாதுக்களான ஜனங்களை ஏமாற்றிப் பதவி பெறப் பார்க்கிறீர்கள். நீங்கள் சொன்ன ஆறு வாக்கியங்களின் சந்தேகத்தைத் தீர்ப்போமாக. அதாவது :—

"என்னிடம் முதலில் சற்றுக் கோழைத்தனமிருந்ததென்பதை தைரியமாகவும், பகிரங்கமாகவும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் மகாத்மா காந்தி, பண்டிட் நேரு, தாஸ், அலி சகோதரர்கள் போன்றவர்களின் தியாகமும் சேவையும் என்னைப் பொதுஜன சேவைக்குத் தூண்டின," என்று சொன்னீர்கள். அது வாஸ்தவமானால் அவர்கள் வக்கீல் வேலையைப் பாவமெனவிட்டவர்கள், விடச் சொன்னவர்கள் அல்லாமலும் தாங்கள் கட்டாயம் வக்கீல் வேலையை விட்டுவிடுவீர்களென்று எதிர் பார்த்தவர்கள் அவர்களைப்பார்த்து அவர்கள் சொன்னதைக் கேட்டு தேச சேவையில் இறங்கின நீங்கள் ஏன் இன்னமும் வக்கீல் வேலையை வைத்திருக்கிறீர்கள்? ஒரு சமயம் அவர்கள் புத்தியைவிட உங்கள் யுக்தி பெரிதென்றால் அவர்கள் பேரைச் சொல்லிக் கொள்ளுவதற்கும் அவர்களாலேயே நான் சேவைக்குத் தூண்டப்பட்டேன் என்பதற்கும் அர்த்தமென்ன? அவர்கள் ஏற்படுத்தின திட்டங்களை நிறைவேற்றுகிறவர் என்று சொல்லுவதற்கு தங்கள் மனம் வெட்கப்படவில்லையா? "அவர்கள் சொன்னதெல்லாம் ஒத்துக் கொண்டேன். வக்கீல் வேலையை விடச் சொன்னதுமட்டும் ஒத்துக் கொள்ளவில்லை" என்பது உங்கள் எண்ணமாயின் இதுவரையிலும் எங்காவது பகிரங்கமாய் சொல்லி இருக்கிறீர்களா? வக்கீல் வேலையை விடுவது உங்கள் யுக்திக்குப் பொருந்தாவிட்டால் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரைவிட உங்கள்புத்தி எதிலுயர்ந்தது? உங்களைவிட அவர் ஏழையல்லவா? வக்கீல் வேலையை விடவேண்டுமென்றல்லவா உங்களுக்கு முதலுபதேசம். குரு வார்த்தையைக் கைக்கொள்ளாத சிஷ்யன் அந்த குருவின் பேரால் செய்யும் பிரசாரத்தை ஜனங்கள் கைக் கொள்ளுவார்களா? இம்மாதிரி உங்களைப் போன்றவர்களுடைய தேசசேவை யல்லவா நம் நாட்டை அன்னியர் கையில் காட்டிக் கொடுக்கச் செய்தது தவிர,

"ஆசார சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்டேன் அதனால் பிராமணருள்ளும் பிராமண ரல்லாதாருள்ளும் வைதிக மனப்பான்மை உடையவரிடமிருந்துவரும் கோபத்தைக் கண்டு கொண்டேன். இவர்களை நிர்ப்பந்திக்காமல், அவரவர் வீட்டு விஷயங்களில் அவரவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளும்படி விட்டுவிட்டுப் பொதுக் காரியத்திலேனும் சமத்துவமன முறையில் நடக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளவே காங்கிரசில் உழைக்கிறேன்" என்கிறீர்கள். இந்த இடத்தில் தான் உங்கள் வக்கீல் தந்திரம் ஆலோசித்துப் பார்ப்பவர்கட்கு விளங்கும். ஒன்று தாங்கள் குருட்டு நம்பிக்கையால் சொல்லியிருக்க வேண்டும். அல்லது "குடி-அரசு" சொல்லுவது போல் பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லியிருக்க வேண்டும். தாங்கள் பெரிய புத்தியுடைய வக்கீல் குருட்டு நம்பிக்கையில் சொல்லமாட்டீர்கள். தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் சமூகம் முன்னேற்ற மடையவேண்டு மென்றே முன்னிருந்தவர்களும் இப்பொழுதிருக்கும் பெரியவர்களுஞ் சொல்லுகிறார்கள். பாலக்காட்டு கல்பாத்தி ரதோற்சவத்திற்கு ஈழுவர்களைத் தடுக்க 144வது செக்ஷன் போட மயிலாப்பூர் பிராமணர் தான் உதவியாக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? இங்கு இப்படி செய்துவிட்டுத் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்துக்களை வெள்ளைக்காரர் வீதியில் குடி வைக்கிறவர்கள் நீங்கள்தானா? அவரவர்கள் வீட்டில் வைதீகம் வீட்டோடே நிற்கிறது. காங்கிரஸ் பந்தலிலுமில்லை ஆனந்த பவனிலுமில்லை. இவ்விடங்களில் தேச சேவையுமில்லை. வைதீகம் நிறைந்து கிடக்கும் கூட்டத்தில் தான் தேச சேவைகள் உச்சரிக்கப் படுகின்றன. உங்களைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பாவிற்குப் போய் செய்யாததெல்லாம் செய்துவிட்டு வருகிறார்களே அவர்கள் வைதீகர்களுடைய கோபத்திற்கு ஆளாகிறார்களா? தாழ்த்தப்பட்டவர்களை அவரவர்கள் வீட்டிலேயே இருக்கும்படியாய் சொல்லுகிறீர்கள். காங்கிரசில் சமத்துவம் கேழ்க்கக் கூடாது என்கிறீர்கள் இந்த விஷயத்தில் சுவாமி விவேகாநந்தர் சொன்னவைகளில் சிலவற்றை உங்களுக்குஞாபகமூட்டுகிறேன். "இந்தியா முன்னுக்கு வரவேண்டுமானால் வைதீகக் கொடுமைநீக்கப்பட வேண்டும் சமூகக் கொடுமை உதவாது. இவைகளைக் கவனியாமல் ஆங்கிலேயரிடமிருந்து மாத்திரம் பல அதிகாரங்களைப் பெறுவதற்கு சபைகள் கூட்டுகின்றீர்கள் இதைப் பார்த்து அவர்கள் சிரிக்கின்றனர்; ஏன்? மற்றவர்களுக்கு சுதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராயில்லாத எவனும் சுதந்திரத்திற்கு அருகனல்லன் என்பதால் தான். ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை எல்லாம் உங்களிடத்தில் கொடுத்து விடுகிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுதும் இந்த அதிகாரத்தை வகிப்பவர்கள் பொது ஜனங்களை அடக்கிவைத்துக்கொண்டு அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்காமல் இன்னமும் அதிகமான அடிமைத் தனத்தை உண்டாக்குவதற்கே அதிகாரத்தை விரும்புகின்றீர்" என்ற அநுபோகம் பெற்ற சுவாமி விவேகாநந்தரின் வார்த்தைக்குத் தாங்கள் என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்? வீதியில் ஒருவனை நடக்கவிடவும், பொதுப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளவும், சுவாமியைக் கண்ணில் பார்க்கவிடவும் தடையாயிருக்கும் உங்கள் ஜாதியாரின் கோபத்திற்குப் பயப்படும் தாங்கள் சுயராஜ்யம் கேட்க லாயக்குடையவரா என்பதை நீங்களே யோசித்து பாருங்கள்.

"நாங்கள் பிராமணர்களாயிருப்பதால் எங்கள் குலத்தார் செய்ய வேண்டிய கடமை உலக சேவை அதனால் உலக சேவை செய்ய வந்திருக்கிறேன் என்கிறீர்கள்." யாருக்காகத் தாங்கள் உலக சேவை செய்கிறீர்கள்? சில பதவி பிராமணரல்லாதவருக்கு வந்திருப்பதைப் பிடுங்கி உங்களினத்தாருக்குக் கொடுக்க வேண்டுமென்கிற ஒரே ஒரு எண்ணம் தவிர வேறு நல்ல எண்ணம் உங்கள் தேகமெல்லாந் தேடினாலுங் கிடைக்குமா? உண்மையான பிராமணன் உலக சேவை செய்ய ஏற்பட்டால் ஆஷாடபூதி வேஷம், அந்தரங்கப் பித்தலாட்டம், இரகஸ்யப் புரட்டு, பணத்தாசை முதலியதுகள் கூடாது. இவைகள் எல்லாம் உங்களிடம் இல்லாமல் இருக்கிறதா? பொது ஜனங்களை யேமாற்றுவது தான் உலக சேவை என்று கருதுகிறீர்கள் போலும்.

"நான் அட்வகேட் ஜெனரலாயிருந்த சமயம் பிராஸிக்கூஷனுக்காக அனுப்பும் தஸ்தாவேஜுகளைப் படித்துத் தேசத் துரோகம் செய்யவேண்டி இருக்கிறதே என்று நினைத்து வருத்தப் பட்டேன்" என்று சொல்லுகிறீர்கள். அது வாஸ்தவமாயிருந்தால் தாங்கள் அட்வகேட் ஜெனரல் உத்தியோகத்திற்குப் பின் ஏன் தங்கள் மகனை வக்கீலுக்குப் படிக்க வைத்து வக்கீலாக்கினீர்கள். தாங்கள் வக்கீலாய்ப் பார்க்கும் தஸ்தாவேஜுகளெல்லாம் இப்பொழுது தெய்வலோகத்திலிருந்தா தங்களுக்கு வருகின்றன. இந்த இடத்தில் எவ்வளவும் மனசாக்ஷிக்கு விரோதமாகப் பேசியிருக்கிறீர்கள். இவ்வளவு பிரத்தியட்சமாக பட்டணத்தவர்களை ஏமாற்றுகின்றீர்கள். இது உங்கள் சாமார்த்தியமா? எங்கள் அறியாமையா?

"அட்வகேட் ஜெனரலாய் இருந்து அனுபோகம் பெற்றிருக்கிறேன். உத்தியோக அனுபோகம் பெற்றவர்களே ஆசையை விடுவார்கள். இதனால் எனக்கு உத்தியோக ஆசையே இருக்க நியாயமில்லை என்கிறீர்கள். உங்களுக்கு அவர்கள் உத்தியோகம் கொடுக்காவிட்டாலும் கொடுத்தாலும் தங்கள் மகனுக்கும் மருமகனுக்கும் வேண்டுமே. ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் காண்பித்தவழி, இனியும் தூர்ந்து போகவில்லையே உத்தியோகம் கிடைத்து விட்டால் அப்பொழுது மகன் விஷயம் வேறு அப்பன் விஷயம் வேறு என்று விவகாரம் பேசுவதில் என்ன மனிதத் தன்மை இருக்கப் போகிறது. ஸ்ரீமான்கள் தங்கள் மாமனார் கனம் பாஷியமய்யங்கார் அட்வகேட்டாயிருந்து ஐக்கோர்ட்டு ஜட்ஜு வேலையும் பார்த்து சாகிற அன்றுகூட வக்கீல் வேலை பார்த்தாரே பி. ராஜகோபாலச்சாரியார், கலெக்டர் வேலை பார்த்து கொச்சி, திருவனந்தபுரம் இரண்டு தேசத்து திவான் வேலையும் பார்த்து இரண்டாவது கவர்னர் வேலையும் பார்த்து சட்ட சபைத் தலைமை வேலையும் பார்த்து இந்தியா மந்திரி ஆபீஸ் உத்தியோகமும் செய்து இனி சக்தி இல்லை என்று தெரிந்து திரும்பினார். பிரபு சின்ன கவர்னர் வேலை பார்த்தும் ஆசை தீராமல் பிரிவி கவுன்சில் ஜட்ஜு வேலையி

ஸ்ரீ வில்லிபுத்தூர் மகாநாட்டின் தீர்மானங்கள்.

காலஞ் சென்ற ஸ்ரீஜத் சிரஞ்சன்தாஸுக்கு அநுதாபப்படுவதாகவும், காந்தியடிகளால் நிறுவப்பெற்ற நூல் நூற்போர் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்துதினம் அரைமணி நேரமாவது நூற்கவேண்டுமெனவும் தீபாவளிக்கு கதரே அணியவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தேசியவுடையாகக் கதரையே அணியவேண்டும் என்றும், தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்றும், மதுபானத்தை சமூகக் கட்டுப்பாட்டு வழியாகத் தொலைக்கவேண்டுமென்றும், கிராம புனருத்தாரணத்திற்கு ஆங்காங்கு வாசகசாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்றும், காங்கிரஸ் இயக்கம் பரவாமலிருக்கும் கிராமங்களில் பரவச் செய்வதோடு க்ஷீணித்த பழைய காங்கிரஸ் சபைகளை ஊழியர்கள் ஊக்கவேண்டுமென்றும் இந்து மத தேவஸ்தான சட்டத்தை முழு மனதோடு ஆதரிக்கிறது என்றும், தலைவர்கள் பலதிறக் கட்சிகளாகப் பிரிந்து போனபடியால் காங்கிரஸ் எக்கட்சியையும் ஆதரிக்கவாவது காங்கிரஸ் நிதியிலிருந்து தேர்தலுக்குப் பணங்கொடுக்கவாவது கூடாது என அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டுக்கொள்ளுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின என்று மகாநாட்டின் காரியதரிசி அறிவிக்கிறார்.

லிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஸ்ரீமான் சிவசாமி அய்யர் ஸ்ரீமான் சதாசிவ அய்யர் இன்னும் அனேகம் பேர் சீமைக்குப் போய் வெள்ளைக்காரர்களைத் தாங்குகிறவர்கள். இவர்கட்கு உத்தியோக ஆசை தீர்ந்தா போய்விட்டது. இவர்களைவிட தங்களுக்கு விசேட யோக்கியதை என்ன விருக்கிறது? ஆயிரம் ரூபாய் கொடுத்தால் எந்த ஊருக்கும் போவதற்கும் என்ன வேண்டுமானாலும் வாதிப்பதற்கும் தயாராயிருக்கிற தாங்கள் பெரிய பதவிகளைக் கொடுத்தால் விரும்ப மாட்டீர்களா? பணத்தைவிட பதவி பெரிதென்றல்லவா உங்களைப் போன்ற வக்கீல்கள் உத்தியோகத்தை அடைந்தார்கள்.

ஐரோப்பியருடன் பழகி அவர்கள் தந்திரங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறேன் என்கிறீர்கள். இடமில்லாததால் மறு கடிதத்தில் தங்களுக்கு அவர்களுடைய புத்தியாவது தந்திரமாவது தெரியாதென்று நிரூபிக்கிறேன்.

வேண்டுகோள்.

நாகபட்டினம் வே. ப. பக்கிரிசாமி பிள்ளை எஸ்டேட் எக்சிகூட்டரும், ஜில்லா நாட்டாண்மைக்கழக உறுப்பினருமாகிய திருவாளர் வே. ப. காயாரோகணம் பிள்ளை அவர்கள் அறிவிக்கிறார்.

அன்பார்ந்த ஐயா,

நாளிது வருடம் நவம்பர்மீ 8உ நடைபெறப்போகும் சென்னை சட்டசபைத் தேர்தலில் தஞ்சை ஜில்லாவிற்குரிய மூன்று இருக்கைகளுக்கு அநேக நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பூண்டி உயர்திரு வி. ஏ. வீரய்ய வாண்டையார் அவர்களும், நெடும்பலம் உயர்திரு என். ஆர். சாமியப்ப முதலியார் அவர்களும் இரண்டு இருக்கைகளுக்கு அபேட்சகர்களாக முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவர்களும் அரசியல் விவகாரங்களில் அதிக ஊக்கமுடையவர்களாகவும், நமது ஜில்லா முன்னேற்றங்கருதி உழைப்பவர்களாயுள்ளபடியாலும் நமது சென்னை மாகாணத்தின் பெருங்குடி மக்களாகிய நம்மவர்களின் அரசியல், சமூகம், சமுதாயம், விவசாயம், வியாபாரம், கல்வி, கைத்தொழில் நீர்ப்பாசனம் முதலிய துறைகளில் முற்போக்கடைய அவர்களுடைய சுயநலங் கருதா உழைப்பு தற்சமயம் அவசியம் வேண்டப்படுதலாலும் ஓட்டர்கள் தயவு செய்து டி தேர்தலில் டி அபேட்சகர்கள் இருவர்களுக்கும் தங்களாலியன்ற உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள,
வே. ப. காயாரோகணம் பிள்ளை.

தீபாவளி.

நம் பாரத மக்கள் சுயமரியாதையைக் காக்கவும், சுதந்தரமடையவும் வேண்டியதானால், சர்க்கா சங்கத்தாரால் அத்தாட்சி பெற்ற சுத்த கதர் வாங்கி அணியுங்கள்.

திருச்சி ஜில்லா சென்னை சட்டசபை தேர்தல்.

(நாட்டுத் தொகுதி]

அட்சய ஆண்டு புரட்டாசித் திங்கள் 18ந் தேதியன்று திரிசிரபுரம் பிரபல ஹைகோர்ட்டு வழக்கறிஞரும், ஜில்லா போர்டு உதவித் தலைவரும் "திரிசிரபுரம் தமிழ்ச் சங்கம்" அக்கிராசனாதிபதியுமான திருவாளர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் M.A.B.L. போட்டியன்னியில் சென்னை சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனத் திரிசிரபுரம் மு. சிவஞானம் பிள்ளை அவர்கள் அறிவிக்கிறார்.

மதிப்புரை.

மஹேந்திரஜாலம்.

(வி. ரா.)

"மஹேந்திர ஜாலம் அல்லது ரஸ்புட்டீனின் மெஸ்மரிச வாழ்க்கை" என்னும் இந்நூல், ருஷ்ஷிய தேச வனாந்திரப் பிரதேசத்தில் பிறந்து "உலகமே வஞ்சனையினால் தான் நடைபெற்றுவருகிறது ஆதலின் அப்படிப்பட்ட வஞ்சனையினாலேயே ஒவ்வொருவரும் இவ்வுலகின்னை இயன்றமட்டும் ஏமாற்ற வேண்டும்." என்ற உறுதியான நம்பிக்கையால் ஏற்பட்ட துணிவால் பாதிரி வேடம் பூண்டு பெரிய பெரிய சீமாட்டிகளையும், "கன்னிகா" ஸ்திரிகளையும் தெய்வத்தின் பேரால் கற்பழித்துத் தன்னைச் சேர்தலே மோக்ஷ மார்க்கத்துக்கு ஏற்ற சாதனம் என்ற பெரிய நம்பிக்கையை அவர்கள் வணக்கத்தோடு ஏற்றுக் கொள்ளும்படி செய்து, ருஷ்ஷிய ராஜ குடும்பத்தையும் தன்வயப்படுத்தி, அதன் மூலம் அரசாங்க உயர் பதவிபெற்று, அந்நாட்டைப் பலவிதத்திலும் ஆட்டிவைத்த ரஸ்புட்டீன் என்னும் வஞ்சக காமதுரந்தரனது ஜீவிய சரித்திரமாகும். இவனுடைய மாயப் புரட்டுகள் பொதுவாக நமது நாட்டுத் திண்ணை வேதாந்திகளின் நடவடிக்கைகளையும், சிறப்பாக மலையாளப் பார்ப்பனர் வைப்பு மார்க்கத்தையும் எளிதில் ஞாபகம் ஊட்டுவனவாயிருக்கின்றன. கதைப் போக்கு வியப்புச் சுவை செறிந்து விளங்குகிறது. இந்நூலாசிரியர் சென்னை "தாருல் இஸ்லாம்" ஆசிரியர். பா. தாவூத்ஷா சாஹிப், பி. ஏ. அவர். எனவே, உரை நடையின் மாட்சியை தமிழ் மக்களுக்கு நாம் விரிக்க வேண்டியதில்லை. இவர் இஸ்லாமிய மத நூல்கள் பலவற்றை எல்லாரும் எளிதில் உண்மையுணர்ந்து பயனடையுமாறு தெள்ளிய தமிழ் நடையில் வெளியிட்டிருத்தல் தமிழுலகறியும். இந்நூல் 190 பக்கங்கள் கொண்டதாய் முதற்கண் ரஸ்புட்டீனின் படத்துடன் பிழையறப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் இந்நூலை ஆதரித்துப் பயனடைவதோடு இதுபோன்ற இன்னும் பல நூல்களையும் வெளிப்படுத்துமாறு ஆசிரியருக்கு ஊக்கம் ஊட்டுவாராக. விலை அணா 12.

கிடைக்குமிடம் :—

தாருல் இஸ்லாம் புத்தகசாலை, சென்னை.

—o—

உடம்பு குணமாயிருக்கிறது

ஸ்ரீமான் நாயக்கரின் தாயாருக்கு உடம்பு சௌக்கியமில்லை என்று முன் தெரியப்படுத்தி இருந்தோம். இப்போது குணமாயிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பிரமேககுல சம்ஹாரி

சகல வெள்ளை வெட்டை, நீர்க்கடுப்பு, தந்தி மேகம், ரணம்; அரைசிலிப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீர்யம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. I)

வட ஆற்காடு ஜில்லா வோட்டர்களுக்கு

யாருக்கு ஓட்டுக் கொடுப்பது

நம் வட ஆற்காடு ஜில்லாவில் ஆயிரக்கணக்கான ஓட்டர்கள் இருக்கின்றார்கள். தேச நன்மைக்காக உழைக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு, பிராமணரல்லாதாரை முன்னேற்றமடையாவண்ணம் வேலை செய்வதற்கு, தங்களுடைய சுய நலத்திற்கே பாடுபடும் சுயராஜ்யக் கட்சியினரின் தலைவர் மைலாப்பூர் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மூன்று பேர் அபேக்ஷகர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களில் முதன்மையானவர் சேலம் பாரிஸ்டர் ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார். இவர் நம் ஜில்லாவாசி யல்லர். 26-9-26ல் அன்று வேலூர் ஸ்ரீமான் ஏ. வி. கெங்காதர சாஸ்திரியார் அவர்கள் வீட்டில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் செட்டியார் கீழ்க்கண்டவாறு பேசி இருக்கின்றார். "நான் செப்டம்பர் ௴ 18 வ வரைக்கும் சென்னையிலேயே இருக்கவேண்டி இருந்தது. ஏனெனில் சென்னை சட்ட சபையில் ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவைப் பற்றி விவாதம் நடக்கையில் கைதூக்குவதற்கு ஆள் வேண்டும் என்று என்னை இருக்கும்படி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொன்னார்" இதனால் ஸ்ரீமான் செட்டியார் எவ்வளவு தூரம் பிராமணர்களின் பேச்சைக் கேட்டு அவர்களைப் பின்பற்றுவார் என்று நன்கு விளங்குகின்றது. சேலத்தில் "செல்லாத காசு" வட ஆற்காட்டில் எவ்வாறு செல்லுகிறது என்று பலர் கேட்கலாம். ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஜில்லாவிலுள்ள பிரபலஸ்தர்களின் மனப்போக்கிற்குத் தருந்தாற்போல் பேசி அவர்களுடைய மனதைக் கவர்ந்திருக்கின்றார். சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு இதுவேதான் காரணம். இப்போது நிற்பதற்கும் காரணம் இதுவேதான். வெளி ஜில்லா வாசிகள் வேண்டாம் என்ற கிளர்ச்சி உண்டாயிருக்கும் இச்சமயத்தில் ஸ்ரீமான் செட்டியார் சுயமதிப்பை உடையவராக இருந்தால் தன்னுடைய நியமனச் சீட்டை வாபஸ் பெற்றுக்கொண்டிருப்பார்.

இரண்டாவது காங்கிரஸ் அபேக்ஷகர் சென்னை பட்டைமண்டி ஸ்ரீமான் கோ. வெங்கடரங்கம் நாயுடுகாரு. 1920 வது வருஷத்தில் சீர்திருத்தச் சட்டம் ஏற்பட்டதுமுதல் கொண்டு இவர் சட்ட சபைக்கு அபேக்ஷகராக நின்று வந்து இவ்வருஷத்தில் நடந்த உபதேர்தலில் வெற்றி மாலை பூண்டு சட்ட சபையை நுழைந்தவர். 1920வது வருஷத்துத் தேர்தலுக்கு முன் கயாவில் கூடிய காங்கிரசின் தீர்மானத்தை ஒட்டி தன்னுடைய நியமனத்தை வாபீஸ் பெற்றுக் கொள்ளாதது நேயர்கள் அனைவரும் அறிவார்கள். காங்கிரஸ் தன் உன்னதபதவியில் இருக்கும் போதே அதனுடைய உத்திரவை மீறிச் சென்றவர். இப்போது காங்கிரஸ் சீர் குலைந்து இருக்கும்போது அதனுடைய கட்டுக்குட்பட்டு நடப்பார் என்பது என்ன நிச்சயம்,

மூன்றாவது காங்கிரஸ் அபேக்ஷகர் சென்னை வக்கீல் ஸ்ரீமான் எம். ஏ. மாணிக்கவேல் நாய்க்கர். இவர் காங்கிரசுக்காக என்ன வேலை செய்திருக்கின்றார். சுயராஜ்யக் கட்சியின் அபேக்ஷகராக நின்றால் ஜெயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இவர் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்திருக்கின்றாரே ஒழிய வேறல்ல.

மேல்கண்ட மூன்று அபேக்ஷகர்களும் காங்கிரஸ் வாதிகள்; உத்தியோகம் வகிக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும், பந்துக்களுக்கும் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து வருகின்றனர். இதற்கு ஸ்ரீமான் செட்டியாரும் ஒரு உதாரணம்; தன்னுடைய குமாரருக்கு கவர்ன்மெண்டில் உத்தியோகம் வாங்கிக் கொடுத்த சங்கதி எல்லோரும் அறிவர் என்று நம்புகின்றேன்.

ஆனால் இன்னும் மூன்று அபேக்ஷகர்கள் நிற்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஜில்லாவாசிகள். இவ்வபேக்ஷகர்களைப் பற்றிச் சிறிது கூறுவோம். ஸ்ரீமான் ஆரணி ஏ. என். பரசுராம நாய்க்கர் ஒரு அபேக்ஷகர். இவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; உண்மைத் தியாகி; 1920 வருஷத்தில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசின் சார்பாக சென்னை சட்ட சபைக்கு அபேக்ஷகராக நின்றார். தேர்தலுக்கு முன் கூடிய கயா காங்கிரசின் தீர்மானத்தை ஒட்டி இவர் எவ்வளவோ பணம் செலவழித்திருந்தும் தன்னுடைய நியமனத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார். காங்கிரசின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு நடந்துவருகிறவர் 26-9-26ல் அன்று வேலூரில் நடந்த ராஜீ கூட்டத்தில் இவரை மூன்றில் ஒரு அபேக்ஷகராக எடுத்துக்கொள்ள சுயராஜ்யக் கட்சியினர் மறுத்தது பெரிய அநீதியாகும். இவருடைய கொள்கைகளும் நோக்கங்களும் இவர் விடுத்துள்ள பிரசுரங்களினால் தெரியவரும்.

மற்றொரு அபேக்ஷகர் ஸ்ரீமான் கார் கிருஷ்ணசாமி நாயுடுகாரு ஆவார். இவர் ஜில்லா போர்டின் தலைவராக இருந்து ஜில்லாவின் முன்னேற்றத்திற்காகப் பல அரிய தொண்டுகள் புரிந்திருக்கின்றார். சென்னை சட்ட சபையிலும் சென்ற மூன்று வருடங்களாக மெம்பர் ஸ்தானம் வகித்து, சுயராஜ்யக் கட்சியினர்களைப்போல் கண்டபடி பிதற்றுமலும், உளறுமலும், மௌனம்சாதித்துத் தன் சக்திக்கியன்றபடி பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குப்பாடுபட்டிருக்கின்றார்.

மூன்றாவது அபேக்ஷகர் ஸ்ரீமான் குடியாத்தம் பீமாராஜமுதலியார்; இவர் ஜில்லா போர்டில் அங்கத்தினராக இருந்து ஜில்லாவின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டிருக்கின்றார்.

ஆகையால் ஓட்டுரிமையைப் பெற ஜில்லாவாசிகளே! நாங்கள் தேசத்திற்காக உழைக்கின்றோம். என்று சொல்லிக்கொண்டு சுயநலத்திற்குப் பாடு படும் கட்சியினரை ஆதரிக்கப் போகின்றீரா? அல்லது நாங்கள் இன்னதுதான் செய்யப்போகின்றோம் என்று சொல்லி அதைப்போல் நடப்பவர்களை ஆதரிக்கப் போகின்றீர்களா? நன்றாக யோசனை செய்யுங்கள். உண்மைத் தியாகியான ஸ்ரீமான் ஏ. என். பரசுராம நாய்க்கரைப் போன்ற அபேக்ஷகர்களுக்குத் தங்கள் ஆதரவை அளிக்கப் போகின்றீர்களா? அல்லது காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு அதனுடைய முன்னேற்றத்திற்காக ஹானியாக இருக்கும் வெளியார்களை ஆதரிக்கப் போகின்றீர்களா? ஆகையால் ஓட்டர்களே உங்கள் ஓட்டுரிமையின் பயனை இப்போது காண்பிக்கவேண்டும். நம் ஜில்லாவாசிகளாகிய ஸ்ரீமான்கள் ஏ. என். பரசுராம நாய்க்கர் கார். கிருஷ்ணசாமி நாயுடு, குடியாத்தம் பீமாராஜ முதலியார் ஆகிய இவர்களுக்கு ஓட்டு கொடுக்கும்படியாக அநேக கோடி நமஸ்காரத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜில்லாவாசி.

பாலக்காடு வித்வான் நடேசம் பிள்ளை ஞாபகச்சின்னம்.

காலஞ்சென்ற பாலக்காடு வித்வான் நடேசம் பிள்ளை அவர்கள் உயிருடன் இருக்கும்போது கேரளத்தில் உள்ள தமிழ் மக்கள் முன்னேற்றத்தையும், தமிழரின் முன்னேற்றத்தையும் உத்தேசித்துப் பாலக்காட்டில் ஒரு இலவச வாசகசாலையும் கல்விச் சாலையும் ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு அதி தீவிர முயற்சி செய்துவந்து பல பெரியார்களைக் கொண்டு சித்தி பெறச்செய்யும்சமயத்தில், காலகதி அடைந்து விட்டது நமது நாட்டினுடையவும் தமிழ்த் தாயினுடையவும் துர் அதிஷ்டவசமென்றே, சொல்ல வேண்டும். ஆயினும் அன்னார் காலகதி அடைந்ததை உத்தேசித்து அவருடைய ஞாபகம் என்றும் நிலைநிற்கவும், அவரின் ஆத்மா சாந்தி அடையவும் தமிழினுடையவும் தமிழ் மக்களுடையவும் முன்னேற்றத்தை உத்தேசித்து அவர் பாடு பட்டு அரைகுறையாய் விட்டுப்போன காரியத்தை பூர்த்தி செய்யவும், இப்பாலக்காட்டில் வித்வான் நடேசம் பிள்ளை அவர்கள் பெயரால் ஒரு இலவச வாசகசாலையும் கல்விச் சாலையும் கட்டி வைக்க அடியில் கண்ட கனவான்கள் முயற்சி செய்வதால் அம் முயற்சிக்கு தமிழ் மக்களும் தமிழபிமானிகளும் தங்கள் தங்களால் கூடிய உதவியைச் செய்யக் கோருகிறோம். நூறு ரூபாய்க்கு மேல் பரிசளிப்போரின் பெயர்சலவைக் கல்லில்செதுக்கி கட்டடத்தில் வைக்கப்படும்.

முயற்சியாளர்கள்:—

1. வி. நஞ்சப்பகவுண்டர் 2. அ. சின்னப்பதாசர் 3. வி. ஆர். ரெங்கைய செட்டியார் 4. ஆர். வெங்கிட்டராம கவுண்டர் 5. பி. சி. கந்தசாமி பிள்ளை 6. நா. சீனிவாசலு நாயுடு 7. சொ. ராமலிங்கம் பிள்ளை 8. எம். அம்மையப்ப பிள்ளை 9. கைவல்ய சுவாமிகள் 10. ப. சி. மாணிக்கம் பிள்ளை 11. கெ. ஆர். கிருஷ்ணமூர்த்தி செட்டியார்.

இந்த நற்காரியத்திற்கு தபால் மார்க்கமாய்ப் பொருளுதவி செய்வோர்கள் பொக்கிஷதாரராகிய அடியில்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பவும்:—

வி ஆர். ரெங்கைய செட்டியார்,
பாத்திர வியாபாரம், பாலக்காடு.

தஞ்சை ஜில்லா ஓட்டர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

திராவிட சகோதரர்களே! வெள்ளம் வருமுன் அணை கோலுங்கள்.

ஐயா, சென்ற எலெக்ஷனில் வாக்காளர்களாகிய நம்முடைய வாக்குரிமைகளைப் பெற்று சட்ட சபைக்குச் சென்ற நமது பிரதிநிதிகள் என்பவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாய் சட்ட சபையில் நடந்து கொண்ட தோரணையை ஊன்றி நோக்கின் ஓட்டர்களாகிய நம்மை சுத்த பயித்தியக்காரர்களென்று நினைத்து நமது கருத்துக்கும் நன்மைக்கும் விரோதமாய் நடந்துகொண்டதல்லாமல் வரப்போகும் தேர்தலிலும் நம்மை ஏமாற்றி சட்ட சபையில் நுழைந்து தங்கள் சுயநலத்தை சாதித்துக்கொள்ளலாம் என நினைத்து மறுபடியும் அபேட்சகராய் நிற்கிறார்கள்போலும்.

ஓட்டர்களில் பெரும்பான்மையான திராவிட மக்களுக்கு அறநிலையப் பாதுகாப்பு மசோதா சம்பந்தமாய் இவர்கள் நம்பிக்கை துரோகம் செய்ததை யாரால் மறுக்கமுடியும். இவர்கள் போலி சுயராஜ்ய கோஷ்டியினராகிய ஒரு சில பார்ப்பனர்களுடன் கூடிக்கொண்டு வாக்காளர்களாகிய நம்மை துச்சமாய்க் கருதி கேள்வி முறையின்றி சட்ட சபையை விட்டு வெளியேறினதும் மனச் சாட்சி என்ற பகட்டு வார்த்தை சொல்லித் திரும்ப உள் நுழைந்ததும் ஒருமுறை ஆதரித்த தர்ம பரிபாலன மசோதாவை மறுமுறை மறுக்கத் துணிந்ததும் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையேயாகும்.

வாக்காளர்களே! இச் சென்னை ராஜதானியில் ஏராளமான பூஸ்திதியுடைய அநேக தர்ம மடங்களும், ஆலயங்களும், மடாதிபதிகள் என்போர்களாலும், தர்மகர்த்தாக்களாலும் ஒழுங்கீனமாய் நிர்வகிக்கப்பட்டு அதன் தர்ம சொத்துக்களை ஏதேச்சாதிகாரமாய் தாசி வேசிகளுக்கும், மதுபானங்களுக்கும், கேலிக் கூத்துகளுக்கும், அது சம்பந்தமாய் ஏற்படுகின்ற கொலை, கொள்ளை முதலான கேஸ்களுக்கும், வக்கீல் கூட்டத்தார்களுக்கும் வாரியிறைக்கும் பெருவாரியான துன்மார்க்கங்களிலிருந்து தப்புவிக்க நமது பெருமை பொருந்திய முதன் மந்திரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட அறநிலையப்பாதுகாப்பு மசோதாவை கல் நெஞ்சப் பார்ப்பனர்களுடன் கூடிக்கொண்டு எதிர்த்து நாசமாக்க முயன்றதை கடவுள் மன்னிக்கமாட்டார் என்றே உறுதி கூறுவேன்.

வாக்காளர்களே! நமது ஜில்லா பிரதிநிதிகளில் யார் யார் மசோதாவை எதிர்த்தார்களோ அதாவது திரு எஸ். முத்தையா முதமுதலியார் அவர்களுக்கும் அவர்தம் கூட்டாளிகளாகிய சுயராஜ்ய கட்சியாருக்கும் பார்ப்பனர்களுக்கும் நமது மேன்மை பொருந்திய வாக்குரிமை என்னும் ஓட்டை தானம் செய்யாமல் திராவிட மக்களாகிய நம்மவர்களின் தன் மதிப்பிற்கும், நம்மக்கள் முன்னேற்றமடையும் வழிகளைக் காக்கும் பொருட்டு சுயமரியாதை, சமத்துவம் என்னும்போர் முனைக்கு முன்னணியில் நிற்கும் தலைவர்களாய் நமது குறைகளை சட்ட சபையிலும் வெளியிலும் திறமையாய் போராட முன் வந்திருக்கும் ஸ்ரீமான் பூண்டி வாண்டையார் அவர்கள் நெடும்பலம் ஸ்ரீமான் சாமியப்ப முதலியார் அவர்கள் பட்டுக்கோட்டை ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை அவர்கள் ஆகியவர்களுக்கே திராவிட மக்களாகிய நாம் நமது வாக்குரிமையைக் கொடுத்து நமது சுயமதிப்பையும், சுயமரியாதையும் காப்பாற்றவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

எஸ். கோபாலகிருஷ்ணன்,
கும்பகோணம்.

வல்லை எழுமின் எழுமினோ.

:0:

மைந்தன் பேரில் முதுரு கண்டானுக மயக்கி ஐயோ பால்
தந்த முலையைத் திருகி யெறியத் தருக்கி யெழுந்த தாயர்-கால்
வந்த வீரத் தமிழரே நீர் வல்லை யெழுமின் எழுமினோ!
அந்தோ! மயிலை சீநி வாஸன் ஆர்ப்பரிப்புக் கேண்மினோ! 1
நாய்க்கர் நாயு டாதி யானூர் நண்ண லாலே காங்கரஸ்
காய்த்தெ டுத்த செம்பொன் போற்க ளங்கமற்று விட்டதாம்
வாய்க்கு வந்த வாறு வீசும் மயிலை சீமான் வாய்மதம்
தேய்க்கு மாறு திரண்டு கூடி செய்மின் சபதம் தமிழர்காள்! 2
தேகி தேகி யென்னு வாயில் தேடிவந்து பிச்சை கொண்
டேகி வயிறு நிரப்பு மரபுக் கிந்த வீர மேற்பதோ?
ஆய்கின் நா மடங்கி வாழ்ந்த தாகு மிந்த அற்பமே
லாகி ஆணவம் மிகுந்தின் றட்டகாசம் செய்வதே. 3
நான்கு கோடி நம்மவர்தென் னாட்டில் வாழ்ந்தும் பார்ப்பனர்க்
கேன் காணிந்த ஏகபோக ஆசையாம் பேராசையே?
வான்கொள் பதவி வலுவின் ஞௌவி வாழ்ந்த கண்டே நன்மதி
மான்கள் நாயர் ராயர் கண்டார் வலிசார் "ஜஸ்டிஸ்" கட்சியே. 4
சட்டமா சபைக்கணள் ஸ்தானம் யாவும் நம்மவர்க்
கெட்டுமாறு வேலை செய்ய இன்றே ஊக்கம் கொள்மினோ
இட்டரே நவம்ப ரெட்டிங் கின்னே வந்து விட்டதால்
முட்டுறு ப்ரசார வேலை முடுகிச் செய்ய முயல்மினோ. 5
வீடு தோறு மேறி யேறி வீழ்ந்து கெஞ்சி வேண்டுமின்
நாடுவாழ நம்மவர்க்கே நல்லீர் "ஓட்டு"ச் செய்யுமின்
கேடு பார்ப் பனக்குழாங்கள் கெலிக்குமாயின் கேளுமின்
நீடு பெறுவர் பார்ப்பனர்க்கே "ஓட்டு"ச் செய்வோர் உணருமின். 6
தருமசொத்துப் பாதுகாப்புச் சட்டம் முற்று ருவகை
கருதியிரவும் பகலும் உழைக்கும் கசடரிந்தப் பார்ப்பனர்
மருவுசட்ட சபையில் மிகுதி வாய்ந்த ஸ்தானம் வாய்க்கில் நம்
கருவறுத்துக் குடிகெடுப்பர் கடவுளாணை உண்மையே! 7
அண்டிவாழ வந்தபிச்சை ஆண்டிகட்கு நம்மனோர்
மண்டிபோட்டு வணங்கிவாழ்கை ..ரயினுக் கடுத்ததோ?
நொண்டிகூனர் குருடரல்லேம் நொய்ய பார்ப்பார் துணைகொள
ஒண்டியாய்நா மொத் துழைப்பின் உறுதி வெற்றி உறுதியே! 8

எஸ். முத்துசுவாமிப் பிள்ளை,
"வஞ்சிகேசரி" ஆசிரியர், திருவனந்தபுரம்.

தென்னிந்திய காதி பந்தர்.

மாயவரம் கலியாணசுந்தர முதலியார் சார்டிபை பெற்ற கதர் ஸ்டோரில் தென்னிந்தியாவிற்காக கதரில் உள்ள சகல நிறுசுகளும் பலவூர் கதர்களும் கிடைக்கும். வந்து பாருங்கள், வாங்குங்கள், ஏராளமான ஸ்டாக்கு தீபாவளிக்கு கதரே அணியுங்கள். 100-க்கு 25 அட்வான்சு அனுப்புகிறவர்களுக்கு வேண்டிய சரக்கு வி. பி. யில் அனுப்புகிறோம்.

எம். கலியாணசுந்தர முதலியார்,
கதர் ஸ்டோர், மாயவரம்.

மதன கோலாகல

ரசமணி மாத்திரை.

அபார சக்தியுடையது. விந்தைக் கட்டும். விங்கம் பெருக்கும். மேனி பழுக்கும். ஒரே வேளையில் இதன் சிங்க வீரியத்தைக் காணலாம். 25 மாத்திரை ரூ. 2. வி. பி. வேறு. உத்தரவாதம் கடிதம் ரகசியத்தில் வைக்கப்படும்.

ஸ்ரீ ராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென்னிந்தியா)

"பணம் சம்பாதிக்கப் பாதைகள் 200"
என்னும்

200 தொழில் முறைகள்.

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள்.

சொற்ப தொகையினுல் சோப், செண்டு முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்தவர்கள் இப்போது லட்சாதி பிரபுக்களாய் இருக்கிறார்கள். பீச்சாம் ஹாலோவே முதலிய சிலர் பேர்போன மருந்துகளைச் செய்து கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள். இதுபோன்ற தொழில்களை நீங்கள் என் சுலபமாய் ஆரம்பிக்கக்கூடாது.

200 அபூர்வ தொழில்களின் செய்முறைகளடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

இதன் முழு விவரமடங்கிய 14 பக்கம் துண்டுப் புத்தகத்திற்கு 1 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
26, திருச்சிராப்பள்ளி.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற
ராஜவைத்ய ஆஸ்ரமம்.
சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.
ஆயிரக்கணக்கான
மூலபவுத்ர வியாதியஸ்தர்கள்.
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர்
பி. பி. அன்ஸன்
பிஸ்கட் பாக்டரி.
குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்
அரரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.
சூஸ்பரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்
P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

பெட்ரோமாக்ஸ் லைட்.
லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலை நயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

ஜீர்ணாமிர்தம்.
தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.
ஆஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும், பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலியவற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.
பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!!
கோயமுத்தூர்
இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)
(1924-வூ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	5,00,000—0—0
வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ...	ரூ.	73,900—0—0
தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது	ரூ.	50,430—0—0
டிபாசிட்டுகள்	ரூ.	86,346—7—4
Reserve Fund காப்புத் திரவியம் ...	ரூ.	2706—0—0
நடை முதல் தொகை	ரூ.	1,50,275—9—5

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.
சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.
பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.
(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.
(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம். 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.
(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், பாண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;
(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி கெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.
(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்குடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (ஆ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.
கோயமுத்தூர், 22—9—26. ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற
மஹா சந்தன தைலம்.
இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.
இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.
இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.
24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.
இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலவீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் தூரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.
ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0
விலாசம் தெரிவிப்பவர்களுக்கு [illegible] மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.
டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

வித்வத்வம்! அனுபவம்! ஆச்சரியம்! வினோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆனந்த குண போதினி."**

ஆனந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவர துவங்கியது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்.
25000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
தபால் செலவு ரூ. 0—6—0.

பிநாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை மது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2–4–0. 6-அவுன்ஸ் 1–3–0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம் இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.